விஸ்வகலாநிதி

தென்னிந்திய விஸ்வகர்ம
மத்திய மகாசங்கம்

(ரிஜிஸ்தர் நீ. S. 66/50)
ஆதரவில் வெளிவரும்

விஸ்வகர்ம ஜாதிய, சிற்ப, சித்திர,
கைத்தொழில் பத்திரிகை

1953 ௵ ஜூலை—ஆகஸ்ட் ௴

உள்ளுறை : பக்கம்.

பலகுறிப்புகள்	...	1
தலையங்கம்	...	2
கட்டுரைகள்	...	3
நமது சட்டசபை வேலைகள், கேள்விகள்	...	13

தலைமை ஆசிரியர்:—
T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார்,
M.L.C., F.R.S.A., (LONDON)

MADRAS

சந்தா விபரம்

	ரூ.	அ.
வெளி நாட்டு வருடசந்தா ...	5	0
வெளி நாட்டு விசேஷ அங்கத்தினர் ...	6	0
,, கிளைச்சங்க இணைப்புச் சந்தா ...	6	0
உள்நாட்டு அங்கத்தினர்கள் வருடசந்தா ...	4	0
விசேஷ அங்கத்தினர் வருட சந்தா ...	5	0
கிளைச் சங்கங்கள் இணைப்புச் சந்தா ...	5	0

அங்கத்தினர் வேறு சந்தா செலுத்தாமலே பத்திரிகையை இலவசமாகப் பெறலாம். விசேஷ அங்கத்தினருக்கு சர்டிபிகேட்டு கொடுக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு

சுமார் 1500 சந்தாதாரர்கள் 1952 வருஷத்திய சந்தாவை முன்பணமாக அனுப்பாமல் பாக்கிவைத்துக் கொண்டிருப்பதாலும், பத்திரிகை பெரும் நஷ்டத்தில், குலாபிமானம் கருதி, கஷ்ட நிலைமையில் பத்திரிகை வெளி வந்து கொண்டிருப்பதாலும் உள்ளூர், வெளியூர், இலங்கைநேயர்கள், தங்கள் சந்தாவை உடனடியாக அனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இல்லையேல், 20-4-52ல் கூடிய கமிட்டியாரின் தீர்மானப்படி அடுத்த பத்திரிகை கண்டிப்பாக அனுப்பப் படமாட்டாது.

தலைமை ஆசிரியர்

மூன்றாவது நோட்டீஸ்
(மொழி பெயர்ப்பு)
18-8-52.

ஸ்ரீ பாகவதர் வக்கில்; ஸ்ரீ K. ஸ்ரீனிவாசன் அவாகள் மூலமமத்திய மகா சங்கப்பொதுக்காரியதரிசியார் ஸ்ரீ. M. K. தியாகராஜபாகவதருக்கு கொடுத்திருக்கும் பதில்

ஐயா, நோட்டீஸ்

தங்கள் கட்சிககாரர் ஸ்ரீ. M. K. தியாகராஜ பாகவதர் சார்பாக அனுப்பிய 26.7.52.ய கடிதம் கிடைத்தது தங்கள் கட்சிக்காரர் தாம் கொடுக்க வேண்டிய பாக்கிகளைக் குறித்து வெறும் பொய்யாகவும், திரித்தும் எழுதியிருப்பதைக் கண்டு எனது கட்சிக்காரர் மனமுடைந்து ஆச்சரியப் படாமலிருக்கக் கூட வில்லை

அவருக்கு வரவு வந்த தொகைகளுக்கும, செலவு செய்த தொகைகளுக்கும் ரசீதுகளையும், வவுச்சர்களையும் கமிட்டியார் பார்வைக்கு அனுப்பாமல்பிடிவாதம் காட்டுவதைக் கண்டு, தஙகள் கட்சிக்காரர் பொய்க் கணக்கு அனுப்பியுள்ளாரென்றும், பெரும் தொகையை சந்தேகமற சொந்த உபயோகத்துக்குக் கையாடியிருப்பதாகவும், என் கட்சிக்காரர் ஊகிக்க இடந்தருகிறது, உடனே அவர் மீது வேறு நோட்டீஸ் அன்னியில்கிரிமினல், சிவில் வழக்குத் தொடர எனது கட்சிக் காரர் என்னைக் கேட்டுக் கொண்டுள்ளார். தங்கள் கடிதத்தில் கண்டுள்ள மிரட்டிப் பறித்தல், மோசடி செய்தல் என்னும் பதங்களை எனது கட்சிக் காரர் வன்மையாக ஆட்சேபிப்பதுடன் அவை தமது தொழில்கள் அல்லவென்பதை தங்கள் கட்சிக்காரர் ஊன்றி உணர விரும்புகிறார்.

நமது வழக்குக்குப் பாதகமன்னியில், தங்கள் கட்சிக்காரர் அனுப்பிய செக் சங்கத்தாரால் தற்காலிகமாக பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. இந்நோட்டீஸே முடிவானதாகும்.

இப்படிக்கு,
ஜி. நாகராஜன், அட்வகேட்

'விஸ்வகலாநிதி' சந்தாதாரர்களுக்கு கடைசி அறிவிப்பும், வேண்டுகோளும்.

எத்தனையோ முறை தெரிவித்தும், கைசலிக்க எழுதியும் கெஞ்சாக்குறையாகக் கேட்டுக் கொண்டிருந்ததும உள்நாட்டு சந்தாதாரர்களில் சுமார் 1500-பேர்களும். இலங்கை நேயர்களில் சுமார் 300 பேர்களும் இதுவரையில் சந்தா செலுத்தாமலே இலவசமாகப் பத்திரிக்கையைப் பெற்றுப் படித்துக் களித்து வருகிறார்கள். சந்தா கொடுக்காவிடில் ஒரு பத்திரிக்கை எப்படி தொடர்ந்து நடக்குமென்பதை நீதியுடனும், மனச்சான்றுடனும் நேயர்கள் சிந்திப்பதில்லை. இதனால் உள் நாட்டு சந்தா பாக்கி ரூ. 6000மும், இலங்கை பாக்கி ரூ. 1500 ஆகமொத்தம் ரூ-7500-ம் செப்டம்பர் அக்டோபர் மாதங்களுக்குள் வசூலாக வேண்டியிருக்கிறது. இது வரையில் பிறர் உதவியை எதிர்பாராமலே பத்திரிகை, சங்கச் செலவாக ரூ. 5000 க்கு மேல் செலவிட்டிருக்கிறோம். இனி அவ்வாறு தொடர்ந்து செய்வதற்கு நம்மிடம பொருவ் பலமில்லையென்பதை வணக்கமாகத் தெரிவித்துக் கொள்வதுடன், சந்தாதாரர்கள் தங்கள் குலக்கடமையை உணர்ந்து, ஸ்ரீ விஸ்வேஸ்வரர் பாத சாட்சியாக இனியேனும் நடந்து கொண்டு 'விஸ்வகலாநிதியை' ஆதரிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். பொதுவாக ஒரே குலப்பத்திரிகை இனி இருப்பதா அன்றி இறப்பதா என்னும் நிலைமை ஏற்பட்டிருப்பதை மிக்க வினயமாக, கடைசிமுறையாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைமை ஆசிரியர்

எச்சரிக்கை

ஸ்ரீ M. K. தியாகராஜ பாகவதரைப் பற்றிய பூஷணைக்கோ, தூஷணைக்சோ கலாநிதியில் இனி இடமில்லை.

ப. ர்.

இதைகவனித்துச் செய்வீர்களா?

ஒரு நான்கு ரூபாய் மட்டும் ஒரு நண்பர் செலுத்தி விட்டால், மாதா மாதம் ரூ 500 செலவில் மற்ற சந்தாதாரர்கள் உதவியின்றி "விஸவ கலாநிதி" பத்திரிகையை வெளிப்படுத்த இயலுமா என்பதை ஆழ்ந்து யோசியாது, தங்கள் ஊரிலும் அக்கம் பக்கத்திலுமுள்ள சந்தாதாரர்களை தட்டியெழுப்பி நிலுவையாக இருந்து வரும் நண்பர்களை சந்தா அனுப்பச்செய்யாது, நிஷ்டூரமாகக் கடிதம் எழுதுகிறார்கள்! இத்தகைய நண்பர்கள், தங்கள் நேயர்களைக் காணும் போதும் சபையில் கூடும்போதும் விஸ்வகலாநிதிக்கு சந்தா அனுப்பி விட்டீர்களா? எப்பொழு அனுப்பப்போகிறீர்கள்? என்று கேட்பார்களாயின், அதையே ஒரு வழக்கமாகக் கொள்வார்களாயின், நினைவூட்டும் கடிதங்களுக்கோ குலப் பத்திரிகை தாமதித்து வெளி வருவதற்கோ காரணமில்லையென்பதை மிக வினயமாகத் தெரிவித்துக் கொள் கிறோம். ஆங்காங்கு குலாபிமான மிக்க ஏஜண்டுகள் தாஙகள் வசூலித்துள்ள சந்தாவை அனுப்பாமலும், விவரமான கணக்குக்கொடுக்காமலும் சாக்குப்போக்கு சொல்லி வருகிறார்கள். இவ்வகையில் சுமார் ரூ. 1200 பாக்கி இருந்துவருகிறது. இதன் முழு விவரம் அடுத்த பத்திரிகையில் வெளியிடுவோம். அன்பர்கள் மன்னிப்பார்களாக.

ப—ர்.

விஸ்வகலாநிதி

ஒரு நபருக்கு இரண்டு பத்திரிகைகள தவறுதலாகக் கிடைத்தால், அதிகப்படி பத்திரிகையை விருதாவாக்காமல் நண்பருக்குக் கொடுத்து சந்தாதாரர் ஆகும்படிச் செய்வது குலக் கடமை.

ப. ர்:

தனிப் பிரதி இல்லை

Regd. No. M. 5666.

விஸ்வ · கலாநிதி

VISWAKALANIDHI

தென்னிந்திய விஸ்வகர்ம மத்திய மகாசங்க ஆதரவில் மாதமிருமுறை ஒன்றாக வெளிவரும்

(Reg : S. No 66 of 1950)

விஸ்வகர்ம ஜாதீய
சிற்ப,
சித்திர,
கைத்தொழில் பத்திரிகை:

விளம்பர விகிதம்

முழுபக்கம் ...	40 ரூ
அரைபக்கம்...	22
கால்பக்கம் ...	12

வருட சந்தா விகிதம்

சாதாரண சந்தா ரூ. 4.
விசேஷ அங்கத்தினர்களுக்கு ரூ. 5.

தலைமை ஆசிரியர்: குலோத்தாரக T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார் F.R.S.A., M.L.C.

மலர்-5	1952 ஸ்ரீ ஜூலை— ஆகஸ்ட் மீ	இதழ் 9-10

[illegible]

'விஸ்வகலாநிதி' தோன்றிய காலந்தொட்டு இது வரையில் மிக கண்ணியமான முறையிலேயே நடைபெற்று வருகின்றதென்பதை நேயர்கள் நன்குணர்வார்கள். ஸ்ரீ. M. K. தியாகராஜ பாகவதர் மத்திய சங்கத்தின் மாட்டு இலங்கை கச்சேரிகளிலும், அணிமையில் நிகழ்ந்த கலை விழாவிலும், முறை பிறழ்ந்த வகையில் நடந்துகொண்டதன் விளைவாக நாமே அவரது செய்கையைக்கண்டித்துஎழுதாவிடினும், அவைகளைப் பற்றி வந்த பல கடிதங்களையும், கட்டுரைகளையும் வெளியிட மனமில்லாது மறைத்து வந்துள்ளோம்; வருகிறோம். ஆயினும் எவ்வித பொது நிகழ்ச்சியாயினும் சரி, எத்தகைய கலைஞராயினும் சரி, அவைகளில் குற்றங் காண்பவர்களின் விமர்சனங்களை, அன்னோர் மாற்றி, திருந்திக்கொள்வதையே குறிக்கோளாகக் கொண்டு பத்திரிகையில் வெளியிடுவது இயற்கை. அது போலவே, பல ஊழல்கள் நிறைந்த கலை விழாவின் விமர்சனங்களை மனம் புண்பட்ட இரு இளம் வித்வான்கள் உள்ளது உள்ளபடியே விஸ்தரிக்காமலும், திரித்துக் கூறாமலும், எழுதியதை விஸ்வகலா நிதியில் வெளியிட்டது பத்திரிகாதர்மமேயாகும்.

* * *

மேற் குறித்த விமர்சனங்களின் உண்மையைக் கலை விழாவைக்கண்டு களித்த எல்லா அன்பர்களும் நன்கறி வார்கள். அறிந்த மிகப் பலர் விஸ்வகலா நிதியில் வெளி வந்தவைகள் சரியென ஒப்பியே உள்ளனர். நம்மைப் போல், ஸ்ரீ பாகவதர் அவர்களிடம் உண்மை அன்புள்ளவர்கள், குல அபிமான முடையவர்கள், அவரது அபார சங்கீதத் தேர்ச்சியில் லயப் பட்டவர்கள், இவ்வித புகார்களுக்கு இடம் வைத்துக் கொண்டதைக் குறித்து வருந்தாதிருக்க முடியாது. ஸ்ரீ பாகவதர்பால் நமக்குத் தனிப்பட்ட விரோத மனப் பான்மை கடுகளவும் இல்லை. நமது மனதை சேதித்தும், சோதித்தும் பார்த்தால் நம்மை அறியாமலே அன்பே, பேரபிமானமே மீசுரமாக நிரம்பி இருக்கக் காண்கிறோம். வினைப் பயனால் நேர்ந்த துன்பத்திற்கு நாம் வருந்துகிறோமென்றால், நம்முடன் பழகியவர்கள், நம் குணாதிசயங்களைக் கண்டறிந்தவர்கள் நாம் கூறுவது சத்தியவசனமென்றே முற்றிலும் நம்புவார்கள்.

* * *

மத்திய மகாசங்கத்தாருக்கும், அவருக்கும் நிகழ்ந்து வரும் விவகாரத்தைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. ஸ்ரீ பாகவதர் மனம் வைத்து, போனது போகட்டும் இனியேனும் இணங்கிநடப்போமென்று உறுதி கொண்டாலும், கமிட்டியாரின் சார்பாக பொதுக் காரியதரிசியார் விவகாரத்தை தளர்த்தி விட்டுக் கொடுத்தாலும் இம்முக்கிய விஷயத்தில் எவரும் கவலைப்படக் காரணமில்லை. ஆயினும், கமிட்டியாரின் சார்பாக உறுதி கூறத் தயங்கோம்; அதைப் போலவே ஸ்ரீ பாகவதர் சார்பில் உறுதி கூற நமது மனம் இடங்கொடுக்க மறுக்கின்றது. ஏனெனில், அவரால் சந்தேகமறக் கையாளப்பெற்ற எம்மைப் பற்றிய ஆச்சரியப்படக்கூடிய தூஷண மொழிகளைப் பிறர் வாயிலாகக் கேட்டு நமது மனம் புண் பட்டிருக்கின்றது. ஆயினும், அவர்பால் வெறுப்புணர்ச்சி ஒரு சிறிதும் இல்லை. ஒரு தந்தை தனயனிடம்காட்டும் அன்புஉணர்ச்சியே நமது இருதயத்தில் பரிணமித்துள்ளது.

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

நாம் இனி மேற்கொள்ள வேண்டிய சமூக வேலைகள்.

நாம் கடந்த மூன்று மாதங்களாக சென்னை சர்க்கார் அரசியல் மேல் சபையில் அங்கம் வகித்து வருகிறோம். அரசாங்கமும் பதவியை மேற்கொண்டு மூன்று மாதங்களே ஆகின்றன. 1952-53ம் ஆண்டில் அரசாங்கம் செய்யவேண்டிய வேலைகளும், அவைகளுக்கான மானியங்களும் கடந்த மாதம் 31-ந் தேதியோடுமுடிந்த சட்டசபையில் விவாதிக்கயிட்டு அனுமதிக்கப் பட்டுள்ளன. அன்று நாம் சட்ட சபையில் நமது ஐந்தொழிலாளர்களைக் குறித்து பரிந்துபேசியிருக்கிறோம். மற்ற பொதுக் காரியங்களைக் குறித்தும் விஸ்தரித்திருக்கிறோம். நமது பொன் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் ஷாப் சட்ட நிர்ப்பந்த விதிகளினின்றும் விலக்களிக்க வேண்டுமாய் வற்புறுத்தியிருக்கின்றோம். மதுரை பொன், வெள்ளி, தொழிலாளர் சங்கத்தார் இது குறித்து பேட்டி கண்டும், அதற்கு பரிகாரம் நிகழ்த்தாதிருப்பதைக் கேள்விகள் மூலம் வற்புறுத்தி வருகிறோம். மரம், இரும்புத் தொழிலாளர்களுக்கு கிராம வாசிகள், பட்டின வாசிகளென்னும் பேதமின்றி சர்க்கார் சகல உதவிகளையும் புரிய வேண்டுமென்றும், 1947-ம் ஆண்டில் இத்தொழிலாளருக்கு குடிசைத் தொழிலபிவிருத்தி நிமித்தமாக அச்சட்டத்தால் அனுமதிக்கப் பட்ட ரூ, 500 பண உதவி 1952 வருடம் வரையில் கொடுக்கப் படாமலே நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் அவ்வித உதவியை நாடி மனுச்செய்து கொண்டிருந்தும் அவைகள் கவனிக்கப் படாமலே இருந்து வருவதைக் குறித்து முறையீடு செய்தோம். கிராமத் தொழிலபிவிருத்திக்குச் சாதகமாக, தளவாட சாமான்களை ஐக்கிய கூட்டுக் கம்பெனிகள் மூலம் கடனாகவோ, ரொக்க விலைக்கோ அப்போதைக்கப்போது அலையவிடாமல் கொடுத்துதவும் வசதிகளைச் செய்து தர வேண்டுமாய் வற்புறுத்தியுள்ளோம். கடனைக் கொடுத்துதவினால் தீர்ந்த சாமான்கள் மூலம் கடனை ஈடு செய்து கொள்ளும் வழியைக் காட்டினோம்.

பொன், வெள்ளித் தொழிலாளர்களை மறந்தோமில்லை. இலங்கை பொன், வெள்ளித் தொழிலாளர்களை யொத்து கொள்முதல் விலையில் சர்க்கார் குறிப்பிட்ட அளவு பொன் வெள்ளியை பர்மிட் பெற்ற சகல தொழிலாளர்களுக்குக் கொடுத்துதவவேண்டிய அவசியத்தை வலியுறுத்திப் பேசியுள்ளோம். இலங்கையில் குடிசைத் தொழிலபிவிருத்தி சென்ற 5-ஆண்டுகளுக்குள், அதிசயிக்கத் தக்கவாறு, அபிவிருத்தியடைந்திருப்பதால், சென்னை அரசாங்கத்தின் சார்பாக ஒரு பரிசீலனைக் கமிட்டியை அந்நாட்டுக்கனுப்பி அந்நாட்டு முறைகளை அறிந்து வரச்செய்ய வேண்டுமென்றும் வன்மையாகக் கூறியுள்ளோம். கூட்டுறவு முறையில் நடந்துவரும் உலோக மரத்தொழிற் சங்கங்களுக்கு சர்க்கார் உதவி புரிவதைக் கை விட்டும், அப்போதைக்கப்போது அவைகளை தணிக்கை பார்த்து நல்லமுறையில்கண்காணிப்பதையும் விடுத்து, அக்கம்பெனியின் கௌரவ உத்தியோகஸ்தர்கள் மீது பாணந்தொடுத்து, விவகாரத்தை கோர்ட்டு வரையில் கொண்டு போய் அவர்களை தண்டனைக்குள்ளாக்கி வரும் கொடுமைகளை எடுத்துக் கூறினோம். தொழிலாளர்கள் அதிக படிப்பாளிகளல்லவென்பதையும், சட்டத்தையோ, கணக்கு வைக்கும் முறைகளையோ நன்கு அறிந்தவர்களல்லர் எனக்கூறினோம். எனவே, அவர்கள்மீது பின்னால் குற்றம் கற்பித்து இம்சைக்குள்ளாக்கினால் இவ்வித தொழிற்சங்கங்களால் குடிசைத் தொழில்கள், அரசியலார் எண்ணுவது போல், எந்நாளும் அபிவிருத்தியடையாதென்பதை ஊன்றிக் காட்டியுள்ளோம்.

இவை கிடக்க: நமது தமிழ் நாட்டில் உலோகத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருபத்தொன்று உள்ளன. அவைகள் 1950—51 ஆண்டில் மட்டும் சுமார் $3\frac{1}{2}$லட்சம் பொறுமானமுள்ள சாமான்களை உற்பத்தி செய்திருக்கின்றன. விற்பனை மூலம் சுமார் ரூ. $5\frac{1}{2}$ லட்சம் வருமானம் அடைந்துள்ளன. தச்சர்கள், இதர மர வேலைக்காரர்கள், கட்டை வண்டி செய்வோர், கூட்டுறவுக் கம்பெனிகள் நமது தமிழ்நாட்டில் இன்னும் ஏற்படவில்லை. இதுவரையில் ஏற்பட்டிருப்பது ஒன்றேயொன்று தான். அதன் உற்பத்தியும், இலாபமும் மிக மிகச்சொற்தான். எனவே, உலோகத் தொழிற்சாலைகளும் ஏராளமாக 1953 ஸ்ரீ மார்ச்சு 31உக்குள் ஏற்பட்டாலன்றி சர்க்கார் இதற்காக ஒதுக்கி வைத்திருக்கும் தொகை, சுமார் ரூ. $2\frac{1}{2}$ லட்சமும் செலவிடமுடியாது. எனவே, இத்தொகையில்பெரும் பகுதியைக்குடிசைத் தொழிலாளர்களுக்குபங்கீடு செய்தாகவேண்டும். சர்க்காரைப் பொறுத்த வரையில் மானியம் கொடுத்துதவுவதிலோ, தளவாடம் கொடுத்துதவுவதிலோ இனி சிறிதும் தாமதம் ஏற்படாது. சர்க்கார் மானியம் கண்டவர்களுக்கும், கேட்டவர்களுக்கும் கொடுப்பார்களென்பதை நமது ஐந்தொழிலாளர்கள் அறவே மறந்து விட வேண்டும். நமக்கு, ஸ்ரீ சுப்பாச்சாரியாரும், ஸ்ரீ முருகப்பாச்சாரியாரும், ஸ்ரீ அங்கப்பாச்சாரியாரும் பேர், ஊர் தெரியாத இடங்களிலிருந்து ரூ. 500 சர்க்கார் உதவியைப் பெற்றுத் தரவேண்டுமாய் ரிஜிஸ்டர் கடிதமூலம் அவசரவிண்ணப்பம்செய்துகொண்டிருக்கிறார்கள். அவைகளை நாம்கவனிக்கவில்லையென்று மேலும் புகார் செய்கிறார்கள். மத்திய மகாசங்கம் இது குறித்து உதவி செய்யவில்லையென்றால், அது இருந்து என்ன பயன் என்று அடுப்பங்கரையில் பேசிக் கொண்டு காலத்தைப் போக்கியும் வருகிறார்கள். தனி மனிதர் ஒருவருக் கொருவர் தமது சொந்தப் பணத்தை, நபர் பொறுப்பு, நல்ல தஸ்தாவேஜி மூலமே கடன் கொடுக்கிறார்களென்றால், பேர், ஊர், சங்கத்தொடர்பு, பொறுப்பற்ற சகலவிஸ்வகர்மத்தொழிலாளருக்கும் கேட்டவுடனே சர்க்கார் பணம் கடன் கொடுத்துதவுமென மனப்பால் குடிப்பது அறியாமையே ஆதலால் இவ்வெண்ணத்தை இனி விடுக்க.

எனவே, சர்க்கார் தொழில் மானியத்தையும் உதவிகளையும் நமது ஐந்தொழிலாளர்கள் பெறுவதற்கான வழிவகைகளைச் சொல்வோம். அவற்றைப் பின் பற்றி நடந்தால் சர்க்கார் வலிந்து உதவி புரிய முன் வருவார்கள்.

(1) அருகாமையிலுள்ள மூன்று அல்லது 5 கிராமங்களிலுள்ள இரும்பு, உலோக, மரத் தொழிலாளர்கள் ஒரு சங்கம் உடனே ஸ்தா

பித்து அவைகளை மத்திய மகா சங்கத்துடன், ரூ 5 செலுத்தி கிளைச் சங்கமாகப் பதிவு செய்து இணைப்புச் சர்டிபிகேட்டுகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும். (2) எல்லாந் தொழில்களும் சேர்ந்து நடக்கும்ஒரேகம்பெனியை தற்காலிகமாக ஆங்காங்கு ஏற்படுத்துவது போதும். இச்சங்கங்கள் அபிவிருத்திபெற்றால் ஒவ்வோர் தொழிலுக்கும் ஒவ்வொரு தனிச் சங்கத்தைப் பின்னர்ஏற்படுத்திக்கொள்வது இலகுவாக இருக்கும். (3) நகரங்களைப் பொறுத்தவரையில் தனித் தனி தொழில் சங்கங்களை ஏராளமாக ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். மேற் குறித்த சங்கங்களைக் கூட்டுறவுச் சங்கங்களாக ஏற்படுத்துவதில் சில அனுகூலங்களும், பல பிரதிகூலங்களும் உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களில் வரும் இலாபத்தை பங்குகளுக் கேற்ப சிறிய, ஏமாற்றமடையக் கூடிய வகையில் பகிர்ந்து அளிக்கப் படுகின்றது. ஆயினும் கூட்டு முறையில் ஏற்படும் சங்கங்கள் தங்கள் இலாபத்தை சேம நிதி போக, எஞ்சியதைத் தங்களிடையே நிராடங்கமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம். இன்றுள்ள சட்டப் படி கூட்டுறவு தொழிற் சங்கங்களை மத்திய மகாசங்கத்தின் கிளைச் சங்கங்களாக இணைத்துக்கொள்ள முடியாது. அதனால் மத்திய மகா சங்கத்தாரின் ஆதரவு அவர்களுக்குக் கிடைக்காமல் போவதுடன் சர்க்காரிடம் போராடி பண உதவி பெற்றுத் தரவும் இயலாது. மத்திய மகா சங்கத்துடன் இணைக்கப்பட்ட தொழிற் சங்கத்தின் மூலமாகவே நமது ஐந்தொழிலாளர்களின் தேவைகளையும், கஷ்ட நஷ்டங்களையும் அரசியாலாருக்கு அப்போதைக்கப்போது அறிவித்து மன்றாடிப் பெறலாம். எனவே, நமது மக்கள் இவைகளைச் சீர் தூக்கிப் பார்த்து ஆவன செய்ய வேண்டுயாய்க் கேட்டுக் கொள்கிறோம். நம்மனோரின் கைத் தொழிலபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டு மக்களைப் பிரசார மூலம் தட்டியெழுப்பவும், சுற்றுப் பிரயாணமாக அழைக்கும் இடங்களுக்குச் செல்லவும், நமது மக்களின் தொழில் நிலைமையையும், வறுமை நிலைமையையும் நேரில் கண்டு தெளியவும் உறுதி கொண்டுள்ளோம், ஆயினும் நமது வயோதிகப் பருவம் இந்த திட்டத்திற்கு இடங் கொடுக்குமோவெனும் அச்சம் ஒருபுறம் இருப்பினும், இதனைச் செய்து முடிக்காவிட்டால் எமது பிறவிக்கடனை, குலக்கடனை நிறைவேற்றியவர் அல்லோம் என்னும் அச்சமும் நமது மனதை வாட்டுகின்றது. எனவே, ஸ்ரீ விஸ்வேஸ்வரர் அருளை முன்னிட்டு நமது சுற்றுப்பிரயாணத் திட்டத்தை இப்பத்திரிகையின் வேறொரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம். நம்மனோர் இதனை நன்கு கவனித்து நற்பயன் எய்துவார்களென நம்புகிறோம்.

தலைமை ஆசிரியர்,

1-ம் பக்கம் தொடர்ச்சி

நமது மனதைத் துளைப்பது, துளைத்தது ஒன்று தான். நமது சட்டசபை பிரவேசத்தை, தேர்வைக் குறித்து ஆயிரக் கணக்கான, கடிதங்களும், தந்திகளும், சங்கங்கள், சமூகமக்களிடமிருந்தும்வந்துகுவிந்திருக்க, இவரை இது குறித்து பேட்டி கண்ட இரு தக்க கனவான்களிடம், சிறிது நன்றியும், அன்பும், காட்டிப் பேசாது, தூஷணையாகப்பேசிக் காரணமின்றி கடிந்து அனுப்பியதை இன்றுடன் மறந்துவிடுகிறோம். இறைவன் அவரது முயற்சிகளில் வெற்றிபெறச்செய்வாராக! அரோகதிட காத்திரமும், இனிய சாரீரமும், நீண்ட ஆயுளும் அளிப்பாராக!! குலத்தினருக்கு உதவிபுரிவதில்லை ; ஒருவரையேனும் அவர் கைதூக்கிவிட்டதில்லை, விடுவதில்லை, என்றதூஷண மொழிஒழிய ஸ்ரீ விஸ்வேஸன் அருளட்டும்!!!

* * *

ஸ்ரீபாகவதருக்கு பல இரவு, பகல் வேலைகள் உண்டு. நமக்கும் பலவேலைகளுண்டு. இருவருக்கும் தத்தம் வேலைகளை கவனிக்கபோதிய அவகாசமில்லை. சமூக முன்னேற்றத்துக்கு பாடுபடுவதாக முன் வந்த இவர், 'குளிக்கப்போயும் சேறு பூசிக்கொண்டது' மத்திய சங்கத்துக்கு பெரும் நஷ்டமென சமூக மக்கள் மறப்பதற்கு வெகு காலம் பிடிக்கும்.ஆயினும், சமூகம் பலயுகங்களாகவே இருந்துவருகின்றது. இன்னும் இருந்து வாவை செய்யும். ஸ்ரீ. பாகவதரைப் பற்றிய தூஷணையோ, பூஷணையோ இனி நமது கலாநிதியில் இடம் பெறாது.

நாமும், நமது சங்கங்களும்

ஸ்ரீ D. பாலகிருஷ்ணன் B. Com.
சென்னை

இறைவன் படைப்பில் ஏனைய சிருஷ்டிகளைக் காட்டிலும் மனிதன் ஓரளவிற்கு சுயநல மனப் பான்மையுடையவன் என்று கருதப்பட்டாலும் அவன் இவ்வுலகின் கண் தனித்து வாழப் படைக்கப் பட்டவன் அல்ல. அன்றாடம் உற்றார், உறவினர், நண்பர், அறிமுகமாகாதவர்கள் போன்ற பலருடன் கூடிப்பழகுவது இன்றியமையாதது ஆகும். அங்ஙனம் மக்கள் சந்திக்கும்போது பலதிறப்பட்ட பொருள், கருத்து முதலியவைகளைப் பற்றி அளவளாவி வருவர். பொதுவான இடர்ப்பாடுகளையும், குறைகளையும் போக்கிக் கொள்ள ஆராய்ந்து, ஆலோசித்து பரிகாரம் நனிக் காண்பர். பொழுது போக்கவும், கேளிக்கைகளுக்கும் மக்கள் கூட்டம் கூடுவதுமுண்டு. நாளடைவில் அறிவு விருத்தியடைய நாகரீக வளர்ச்சியும் ஏற்பட அவரவர் ஆற்றல், பண்பு, மனப்பான்மை முதலியவைகளுக்கு ஏற்றவாறும், குறித்த காரியங்களுக்காகவும். மக்கள் பலவினையாகக் கூடலாயின. அதனையே சங்கம், சபை அல்லது குழு என்று பலவாறு அழைக்கப்படுகிறது. இச் சங்கங்களை சமூக, அரசியல், சாதீய, தொழிலாளர் சங்கங்கள் என பல வகையாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு சங்கமும் குறித்த சில நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறுவப் படுவது வழக்கம். தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும், குலநலனை விருத்தி செய்து கொள்ளவும் சங்கங்களைத் தோற்றுவிக்கின்றனர். ஒரு நாட்டை ஆளவும், அரசியல் சமூக பிரச்னைகளுக்கு தீர்வு காணவும் சட்டசபைகள் போன்ற குழுக்கள் ஏற்பட்டிருக்கின்றன. தனிப்பட்ட ஒருவரின் முயற்சி எத்துணை பெரியதாயினும் சமூக சீர்திருத்தப், சுதந்திரப் போர் போன்ற அரும் பெரும் காரியங்களை எளிதிலும் குறுகிய காலத்திலும் செய்து முடிக்க இயலாது. பல ஆண்டுகள் இடையறா முயற்சியுடன், சலியா உழைப்பும் தேவை. ஒருவரின் ஆயுட்காலமே பற்றாமற் போகவும் கூடும். இத்தகைய காரியங்களை சங்கங்கள் தொடர்ந்து

நடந்தால் திறம் பட காலக் கிரமத்தே சாதிக்க இயலும்.

ஓர் சங்கத்தின் வெற்றி அல்லது தோல்வி அதனை நிறுவியவர்கள், தலைவர்கள் இவர்களை மட்டும் சார்ந்ததல்ல. அவர்கள் பால் அங்கத்தினர்கள் கொண்டுள்ள நம்பிக்கை, நன் நன்மதிப்பு, தாங்கள் மேற்கொண்ட கட்டுப் பாடு, ஒற்றுமை ஆகியவைகளின் பயனாக விளையும் ஆதரவையே பெரும் பாலும் சார்ந்தது ஆகும். சங்கங்களால் மக்கள் அடையும் நன்மைகள் மிகப்பல. அவை மக்களுக்கு எல்லாத் துறையிலும் முன்னேற ஓர் அரிய சாதனம் என்று கூறுதல் மிகையாகாது. ஏன்? இன்று உலகமே சங்கங்களால் ஆளப்பட்டு வருகிறது! ஆட்டு விக்கப்பட்டும் வருகின்றது!! இத்துணை சக்திவாய்ந்த இவ்வரிய சாதனத்தை எம்மட்டில் நம் சமூகத்தார் பயன்படுத்தி வருகின்றோம் என்று ஒவ்வொரு விஸ்வகர்மரும் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சுமார் இருபத்தைந்து லட்சம் மக்களைக் கொண்டது நமது சமூகம். புராதன கலாசாரமும், பண்டைப் பெருமையும் வாய்ந்தது. விஞ்ஞான வளர்ச்சி முதிர்ந்த இம் மின்சார உலகில் சக்தி வாய்ந்த அணு குண்டு தோன்றிய இவ்விருபதாம் நூற்றாண்டிலேயும் கண்டோர் பிரமிக்கத்தக்க அபாரமான காரியங்களை அக்காலத்திலேயே செய்து முடித்த ஐந்தொழில் விற்பன்னர்களைக் கொண்டது நமது சமூகம். தமிழ் நாட்டு வேந்தர்களால் போற்றி ஆதரவளித்து வளர்க்கப் பெற்றது நமது சமூகம். ஆனால் இப்பொழுது—இவ்விருபதாம் நூற்றாண்டிலே—இதர சமூக மக்களிடையே எந்த ஸ்தானத்தை வகித்து வருகிறது.? வறுமை எனும் உளுத்துப்போன கால்களைக் கொண்ட அறிவின்மை என்ற அரியணையிலிருந்து பதட்டமின்றி பிற்போக்கு எனும் தென்றலை நுகர்ந்து வர பிற சமூகங்களால் இகழப்பட்டும், சுய மதிப்பிழந்தும் வருகிறது. நம்மவர்களின் குறைகளைப்போக்கி, சீர்திருத்தி காலத்திற்கு ஏற்ப முன்னேற்றம் அடையச் செய்யவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் தென்னிந்திய விஸ்வகர்ம மத்திய மகாசங்கம் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே நிறுவப்பட்டு இதுகாறும் மக்கள் காட்டும் உற்சாகத்திற்கேற்ப செவ்வனே பணியாற்றியே வருகிறது. ஆயினும் நமது சமூக மக்களின் எண்ணிக்கைக்கும் தேவைக்கும் தக்கவாறு அதற்கு கிளைச் சங்கங்கள் கிராமங்களிலும் ஒவ்வோர் தாலுக்காவிலும், கிடையா. அநேக சங்கங்கள் தோன்றியும் பெயரளவில் இருக்கின்றனவே தவிர சரிவர தலைச் சங்கத்துக்குப் பணிந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது அரிதாக இருக்கிறது. பெங்களூர் சங்கம் நடந்து கொண்டிருப்பது இதற்குச் சான்றாகலாம். சில ஊர்களில் அங்கத்தினர்கள் கூட்டம் கூடி வருடக் கணக்கில் ஆகின்றன. இன்றும் சில விடங்களில் சங்கங்களே கிடையா. "பிழைப்பைக் கவனிக்கவே நேரமில்லை மீட்டிங் வேறு" என்ற எள்ளி நகையாடி வராமலிருந்தவர் சிலர். "நமக்கு தெரியாதது அல்ல' புதுசாக எதைப்பற்றி பேசிவிடப்போகிறார்கள். உட்காருங்கள் போகலாம்" என்று குதர்க்கம் பேசி தாங்களும் போகாமல் கூட்டத்திற்கு போகிறவர்களையும் தடை செய்யும் குலாபிமானிகள் இன்னும் சிலர் உளர். இத்தகைய அலட்சியப் போக்கும் சுய உணர்ச்சி குறைவாயுமுள்ள அங்கத்தினர்களைக்கொண்ட சங்கங்கள் மிகுந்து இருப்பினும் விரும்பத் தக்கவையல்ல. துருவேறி மழுங்கிய ஆயுதங்கள் பலவற்றை விட கூர்மையான ஒளி பொருந்திய திறன் மிக்க ஆயுதங்கள் ஒரு சில, மிகுந்த பயன் தரக்கூடியவை ஆனதால் விரும்பத்தக்கவையாம். இவவாறு சங்கங்கள் குறைவாயும், நிறுவப் பட்டவை சீரழிந்தும் வருவானேன்?

பொதுவாக கல்வியின்மையும் வறுமையுமே நமது சமூக மக்களின் அடிப்படியான குறைபாடுகள் ஆகும். பழமையில் புதுமை காணலாம், பெருமையும் கொள்ளலாம் ஓரளவிற்கு. ஆனால் பல பழங்கதைகளைப் பேசி அதையே சதம் என நம்பி வாழ்நாளை வீணாக்குவது சரியன்று. சங்கத்தின் தலைவர், காரியதரிசி போன்ற பதவிகளுக்கு போட்டி இட்டு கிட்டாமல் போகலாம். அதன் காரணமாக அசூயை கொண்டு ஒத்துழையாமையை மேற்கொள்ளும் சங்கத்தினர்களை என்னென்று கூறுவது? சங்கத்தலைவர், காரியதரிசி, உறுப்பினர்கள் குறிப்பாக பொக்கிஷதார் இவர்களிடம் நம்பிக்கையும் நன்மதிப்பும் காட்டவேண்டும். விஸ்வகர்மக்களை விஸ்வகர்மர்களே நம்பாவிட்டால் மாற்றார் எங்ஙனம் நம்புவார்கள்? இவ்வாறு பிளவு ஏற்படத்தான் செய்கிறது. பிற சகோதர சமூகங்களின் சமூகப் பற்று, ஊக்கம் இவைகளை கண்ணுற்றுவது விஸ்வகர்மர்கள் திருந்துவார்களா? இக்காலம் படித்தவர்கள் பலர் நமது சமூகத்தில் இருக்கின்றனர். ஆயினும் அவர்களில் பெரும் பாலோர் ஆற்றல் பெற்றிருந்தும் குல முன்னேற்றத்துக்கான காரியங்களில் ஈடுபட ஊக்கமற்றவர்களாய் இருந்து வருகின்றனர். நமது குல விளக்கெனும் நந்தா விளக்கு ஒளிர சமூகத்தொண்டர்கள் எனும் தூண்டுகோல் மிக இன்றியமையாதது ஆகும்.

இனி சங்க அபிவிருத்திக்கான வழிகள் யாவை என்பதை சிறிது கவனிப்போம். முதலாவதாக, நம்மவர்கள் பெரும்பாலோருக்கு தற்கால சமூக, அரசியல், பொருளாதார நிலைமைகள், போக்கு இவைகளைப்பற்றி அக்கரை இல்லை. படித்தவர்கள் என்று தங்களை கூறிக்கொள்ளும் ஒவ்வொரு குலாபிமானிகள், ஒருசங்கத்தையாவது தோற்றுவிக்கவேண்டும்; குறைநதது ஓர் ஆண்டிற்கு நான்கு சமூக கூட்டங்களில் கலந்து சொற்பொழிவு ஆற்றவேண்டும் என்று உறுதி கொள்ளல் வேண்டும். இவ்வாறு அவர்கள் நடை முறையில் செய்ய முயற்சிப்பார்களேயானால் நமது சமூகம் விரைவில் சீர் பெறும் என்பது திண்ணம். இரண்டாவதாக, நம்மனோர்களின் பொருளாதார நிலை மிகவும் விசனிக்கத்தக்கது. "அருளிலார்க்கு அவ்வுலகமில்லை பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை" என்றதோர் மூதுரையில் உண்மை பொதிந்து கிடக்கின்றது. அவ்வுரையின் பிந்திய பகுதி மக்களுக்கு எவ்வாறு பொருந்துமோ அவ்வாறே சங்கங்களுக்கும் பொருந்தும். சங்க பொக்கிஷம் நிரம்ப அங்கத்தினர்கள் சந்தா, நன்கொடை முதலியவைகள் பெறலாம். திருமணம் போன்ற சடங்குகள், இதரகாரியங்களில் கட்டணம் வசூலிக்கலாம். பொன்வேலை செய்யும்விஸ்வகர்மர்கள் அன்றாடம் சேகரித்துவைக்கும் மெய்க் காட்டு குப்பையில், மெழுகுண்டையில் ஒரு பகுதியை சங்கத்திற்கு அளிக்கலாம், அன்பளிப்பாக. அவ்வாறே இதர விஸ்வகர்மர்களும் தங்கள்

தொழிலின் தன்மைக் கேற்ப பிற வழிகளில் உதவலாம். இன்னும் வசதி இருப்பின் நாடகம், கச்சேரி போன்றவைகளை நடாத்தி எஞ்சிய பொருளை சங்கநிதியில் சேர்க்கலாம். ஆனால் சென்னை கலைவிழா ஏமாற்றம்போல் இருக்கலாகாது. நம்மவர்களின் வேலையில்லாத் தவிப்பை போக்கவும் வறுமையின் கொடிய தளையினின்று மீட்கவும் சங்கங்களாலும் ஆகும். ஐந் தொழில் புரியும் விஸ்வகர்மர்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் இயந்திர சாதனங்கள் போன்றவைகளை அரசாங்கத்தாரிட மிருந்து சங்கத்தின் வாயிலாக உரிமையுடன் பெறலாம். இத் துறையில் மத்திய மகா சங்கம் தகுதிவாய்ந்த கிளைச்சங்கங்களுக்கு உதவி அளிக்க என்றும்கடமைப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சங்கமும் அதைச் சார்ந்த அங்கத்தினர்கள் இன்ன வேலையை இவ்வளவு ரூபாய் நிவேதனத்துக்கு குறைவாகச் செய்துதாக் கூடாது என்ற கட்டுப் பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். அனைவரும் ஒற்றுமை மனப்பான்மையுடன் ஒத்துழைத்தால் எதிர்பார்த்த பலனும் வெற்றியும் கிட்டும். மூன்றாவதாக, சங்க அங்கத்தினர்கள் சங்க நிர்வாக முறைகளையும் வகுத்து அதன்படி நடக்க முயலவேண்டும். சட்டங்களையும் ஆனால் அவைகள் பெரும் பாகம் ஏட்டளவில் நிற்பதற்குக் காரணம் கட்டுப் பாடின்மையும் குறுகிய மனப் பான்மையுமேயாம். ஈண்டு ஓர் நிகழ்ச்சியை சான்று கூறுதல் பொருந்தும். தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள திருப்பாதிரிப் புலியூர் விஸ்வகர்ம மஹா ஜன சபையின் 1936 ஸ்ரீ சட்ட புத்தகத்தை சமீபத்தில் காணும் வாய்ப்பு கிடைத்தது. 1923 ம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்ட இச் சபையை சுமார் 14 ஆண்டுகளுக்கு பின்னர் திருத்தி அமைத்து சங்கங்கள் சட்டத்தின் (SOCIETIES Act) கீழ்பதிவு செய்யப்பட்டது. இதன் ஷரத்துக்களை நோக்கு மிடத்து அங்கத்தினர்களின் அளவற்ற ஆர்வமும், குல வெழுச்சியும் பிரதிபலிக்கின்றது. தற்காலம் சிக்கல் மிகுந்த பாராளுமன்ற சட்டதிட்டங்கள் செவ்வனே வகுக்கப்பட்ட இந் நிர்வாக முறைகள் முன் எம்மாத்திரம் என்று கூட எண்ணும்படிச் செய்கிறது. இதைப் பார்த்தவர்கள் இயற்கையிலேயே பெருமையும் மகிழ்ச்சியும் அடைவர். ஆயினும் மறு ஆண்டிலேயே தமிழ் தெலுங்கு என்ற பிளவு ஏற்பட்டு அங்கத்தினர்களுள் பூசல்கள் நிகழ்ந்து நீதிமன்றம்வரை விஷயத்தை எடுத்துச் சென்றதாகத் தெரிகிறது. கட்சிகள் மிகுந்து இன்றளவும் பிரிந்தவர்களாகவே இருந்து வருகின்றனர். அச் சிறு புத்தகத்தைகண்ணுற்றபின் எழுந்த எண்ணங்களின் விளைவே இக் கட்டுரை என ஈண்டு குறிக்கத்தது. எனவே சங்கத்தின் வெற்றியும், தோல்வியும் அங்கத்தினர்களின் மனப்பான்மை, கட்டுப்பாடு, இவைகளைச் சார்ந்தது என அறியக் கிடக்கின்றது.

நான்காவதாக, மத்திய மகா சங்கம் கிளைச் சங்கங்களை ஆங்காங்கே தோற்றுவிக்க ஆவன செய்ய வேண்டும். முன்னரே இருந்து வரும் சங்கங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். மத்திய மகா சங்கத்தின் தலைவரும், ஜீவிய ஆலோசகருமான பிரம்மஸ்ரீ T.M. தெய்வசிகாமணி ஆச்சாரியார், F. R. S. A. (LON) M.L.C. நமது குலப் பெருந்தகையார் வெளியூர்களில் சுற்றுப் பிரயாணம் செய்து ஆங்காங்கே விஸ்வகர்மர்களை நேரில் கண்டு அவர்களின் தொழில் நிலையையும் மனோபாவத்தையும் அறிந்து ஆவன செய்யலாம். இதன் விளைவாக பல கிளைச் சங்கங்கள் தோன்ற வாய்ப்பு இருக்கிறது. தமது வாழ்நாளை குல முன்னேற்றத்திற்கு அர்ப்பணித்தவரும் விருத்தாப்பிய தசையிலும் ஊக்க மிக்கவராய் சலியாது உழைத்து வரும் T. M. D ஆச்சாரியார் அவர்களை ஊரெங்கும் விஸ்வகர்மர்கள் அன்புடன் அழைத்து குதூகலத்துடன் வர வேற்பரென்பது திண்ணம். நமது சமூக மக்கள்மெய்யுணர்வு பெற்று நல்வாழ்வுவாழசங்கங்கள் பல தோன்றட்டும். விஸ்வகர்மாகள் எவ்விடத்திருப்பினும் எக் குற்றத்திற்கு அறிந்தோ அறியாமையினாலோ பாத்திரர்களாய் இருப்பினும் அவர்களை ஸ்ரீ விஸ்வேஸ்வார் மன்னித்து சிறப்புற வாழ அருள் புரிவாராக!

அன்பர்களே !

உங்கள் சந்தாவை உடனே அனுப்பி கலாநிதியை ஆதரியுங்கள்.

ப.ர்.

காலங்கருதாக் கம்மியரே! கண் விழியுங்கள்!!

ஸ்ரீ. கோ. தனக்கோடி ஆச்சாரியார்,
புள்ளம்பாடி

குலத்தொழிலுக்கு ஆக்கம் தேடுவோம், வாருங்கள்!

காலமென்பது சகடக்கால் போல்வது. அது சுழன்று சுழன்று வருவது. அப்படி சுழன்று வரும்போது, எங்கு போய் நிற்குமோவென நிச்சயிக்க முடியாது.

அச்சக்கரத்தை மக்கள் சரியானபடி ஓட்ட வேண்டும். சரியாக ஓட்டவில்லையானால், அழித்துவிடுமென்பது உறுதி. நமது மக்கள் இப்போது அச்சக்கரத்தில் அகப்பட்டு ஒரு நிலையில் நில்லாது தத்தளிக்கின்றார்கள்.

பல சமுதாய மக்கள் இக்கால நிலைக்கேற்றவாறு வாழ்க்கையை மலைபோல் பெருக்கி குவிக்கின்றார்கள். விலைகள் யேற்றமான காலத்தில் முயற்சியின்பயனாய் லாபம், லாபத்தின் மேல் லாபமென பொருளீட்ட முனைந்து விட்டார்கள்.

மேலும் கீழ் நிலையிலுள்ளவர்கள் உழைப்பின் முயற்சியால், ஊக்கத்தின்மிக்க உயர்ச்சியால் உயர்ந்து உன்னத நிலைக்கு வந்துவிட்டார்கள். உழவுத் தொழிலாளிகள் தங்கள் தொழிலைவிடாது இதர தொழிலையும் செய்து, அதனால் வருவாய் கண்டு முதலாளியாகி விட்டார்கள். தர்ப்பையும் மாவிலையுங் கையுமாய் காலங் கழிக்கும் மரபினர் எத்தனை கிளப்பு, எத்தனைத்தொழில்கள் செய்து முதலாளியாகவில்லையா? அவர்களெல்லாம் வேறுசாதியார்களாய் மாறி விட்டார்களா?

நம் குலாபிமானிகள் காலம் தெரியாது, சுயத்தொழிலை விட மனமில்லாதிருந்தாலும் வேறு தொழில் செய்ய பொருளாதாரக் குறைவினால் துணிவு இல்லாது, நஷ்டம் வருமோவென பயங்கொண்டு, நம் சமூக அறிஞர்கள் விசுவகலாநிதியின் வாயிலாகவும், மகாநாட்டு மூலமாகவும் பச்சை பச்சையாக எடுத்துக் கூறியும், செவிடன் காதில் சங்கு ஊதுவது போல்,

எத்தொழிலிலும் இறங்காது, வாழ்வை நடத்தி வருகின்றோமென்பதை அறியாதிருக்கின்றோம்

ஆன்றோர்கள் முயற்சி!

குலத்தந்தை, சீவிய ஆலோசகர் T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார், தந்தை முக்கண்ணாச்சாரியார் காலங்கொட்டே, வம்ச பரம்பரையாய் விசுவகுல மக்களுக்கெனவே தொண்டாற்றி வருகின்றார். அன்னவர் காலத்திலேயே, நம் மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து வந்ததுடனில்லாது தனது வயோதிக நிலைமையையும் பொருட்படுத்தாது நம் மக்களைத் தட்டியெழுப்பி உன்னத நிலைமையை நிலைநாட்ட சமூகப் பேரறிஞர்களுடன் பல மகா நாடுகளைக் கூட்டி, அம்மகாநாட்டின் மூலம் நம் மக்களுக்கு வேண்டிய ஆக்கவேலைகளைத் தேட அரசியலிலும் புகுந்துவிட்டார்.

குலத்தொழில் சீர்கெடாது செம்மையுறக் கண்ணுங்கருத்துமாய் இமையளவேனும் ஓய்வுபடாது, இக்கால நிலையில் விசுவகுல மக்கள் அரை வயிற்றுக் கஞ்சிக்கு அவதியுற்று அவலையாய்க் காலங்கழிக்கும் மக்களுக்கு முழுவயிற்றுக்கு உணவளிக்க வேண்டுமென அரசியலாரின் துணைக்கொண்டு உறங்கிக் கிடக்கும் ஏழை மக்களுக்கு, தொழிலும், பொருளாதாரமும், நிறைந்து உலகமக்களோடு ஒப்பவாழவும், பெருங்குடிமக்களெனக் கருதி, தொழில் முடக்கமில்லாது சமூக அபிவிருத்திக்கு வேண்டிய சலுகையை உண்டாக்கவே T. M. தெய்வசிகாமணியாரும், கருத்தூன்றி வருகின்றார். கண் விழியுங்கள், எம் மக்களே! எனக் கதறுகிறார்!

நாம் உறங்கக் கூடாது!

சுதந்திர இந்திய அரசியலில் எல்லா மக்களும் பொருளாதாரம் முன்னேற, அதிகாரவர்க்கத்தினராகப் புகுந்து, அன்னவர்கள் சமுதாய மக்களுக்கு வேண்டிய சட்டதிட்டங்களை (விசுவகர்ம தொழில் முதல் இதர தொழில் வரை) வகுத்து தொழிலபிவிருத்தி செய்யமுயன்று நமது பிறப்புரிமையான தொழிலைப் பிடுங்கி எல்லா மக்களுக்கும் கொடுத்து அதற்கு வேண்டிய நிதியை அரசாங்கத்தார் உதவிபுரிய முயற்சிகள் செய்துவருகிறார்கள்.

ஆதலால், விசுவகர்மர்களே! இதுபோது நாம் தூங்கிக்கிடந்தோமானால், குலத்தொழில்கள் பிறர் கைப்புகுவதுமல்லாமல், நமது குலப்பெருமை அழிந்துவிடுமென்பதையுணர்ந்து, நம் குலப் பெரியோர்களைத் தூண்டிவிட, ஆங்காங்கு கூட்டங்களைக் கூட்டி மத்திய மகா சங்கத்துடன் இணைத்தும், இணைக்கப்பட்ட சங்கங்களும், ஒரே கிளர்ச்சியாக இலங்கை வாழ் விசுவகர்மர்களுக்கு இலங்கைச் சர்க்கார் இரும்பு, மரம், பித்தளை, தங்கம், வெள்ளி இவைகளை கூட்டுறவு மூலம் தொழில் செய்யக் கொடுத்துதவி வருவது போல், இந்திய சர்க்காரும் உதவி செய்ய, தீர்மானங்கள் மூலமும், மத்தியமசாசங்கத்தின் வழியாகவும், மேலும் நம் T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார், சென்னை மேல் சபையில் அங்கத்தினராக அமைந்ததின் உதவியால் அரசியலாரோடு போராடவும் இதுசமயம் வாய்த்திருக்கிறது இதை சமூகம் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எல்லா சங்கங்களும், நகரங்களும், கிராமங்களும் அவரை சுற்றுப் பிரயாணமாக வந்து நேரில் நமது சமூகம், தொழில் நிலைமைகளைக் கண்டறியச் செய்யவேண்டும்.

நமது தலைவரே சட்ட சபையில் இருப்பதால், அவருக்குத் துணையாக, நம்முடைய தீர்மானங்களை அனுப்பினால்தான், நம்மக்களுடைய முறையீடுகளின் சத்தம் அரசியலார் காதைப் பிளக்கச்செய்வார். இதற்கு வகை சொல்ல உங்களுடன் போராடுகின்றேனென கேட்கும்படி நாம் கண்விழிப்புகொண்டு தலைவர்களை உறங்கவிடாது அவர்களை எழுப்பி விடுவோமாக.

குதர்க்கப் புத்தி வேண்டாம்

அன்பர்களே, இக்கால நிலையை உணர்ந்து. நம் விசுவகர்ம மக்கள். எங்கு, எங்கு, தனித்தனியாகவாழ்ந்தாலும், அன்றி ஒரு யிடத்தில் வாழ்ந்தாலும். அதில் வேற்றுமை, கொடுமையும் வைத்துக்கொண்டு, வேறு குலத்தவரென வம்புபேசி ஒரே விசுவகுலத்திலேயே, உயர்வும் தாழ்வும்காட்டி உண்பன, கொள்வன, கொடுப்பன இல்லாது, பலசூழ் நிலைகளைச்செய்து, ஒற்றுமையில்லாது வருவதுமல்லாமல், தொழில் முறையில் மேன்மை தாழ்மை காட்டி, ஒருவருக்கொருவர் நாணயக்குறைவுப்படுத்தி தான் வாழ்ந்தால் போதும் அடுத்தவன் வாழப் பொறாமைக் கொண்டு கூலிகளைக் குறைத்து, தொழிலை அம்பலப்படுத்துகின்றார்கள்.

இப்படி குதர்க்கப் புத்தியுடன் வாழ்ந்து வருவதால் நமது குலம்முன்னேற்றமடையாது. தொழிலை காலச்சக்கரம் சுழன்று பிறர் கையினிடம் தள்ளிவிடும் நிலையிருக்கின்றது.

நமது ஐந்து தொழிலை இதுபோது எத்தனை பிறசாதியர்கள் செய்து வருகின்றார்கள். நாமும் கண் கொண்டு பார்க்கின்றோம், ஆச்சரியமும் படுகின்றோம். பிற மக்களிடம் எத்தனை விசுவகர்மர்கள் அடிமையாய் வேலை செய்து அவன் முதலாளியாகி, அவன் கொடுத்த கூலியை வாங்கி தன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குப்போதாது கடன்பட்டு அவதியுற்று அல்லல் படும் குடும்பங்கள் பல உண்டு

இதுதெரிந்து, கண்ணியமாய் வாழ்க்கையைச் செய்யமுற்படாமல் கண்டதே காட்சி, கொண்டதே கோலம், உண்டதே கோடியென வாழ்ந்து. பிறர் வாழ்வதைப் புறங் கூறி தொழிலுக்கு கால் கடுக்க ஓடியலைகின்றோம். ஏன்? நல்ல அறிவு நிறைந்த படிப்பு இல்லாக் குறைதான். ஆனால், நம்மவர்கள் ஒருபடிப்பில் குறையவில்லை. என்ன குதர்க்கவாதப் படிப்புதான் மலிந்து விட்டது. ஒற்றுமை, தொழில், கூலி இவைகளில் வாதம் செய்து, நம் தொழிலின் மேன்மையைச் சீரழித்து. "குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்பு" என்பது போல் தம்மையேதான் கொலை செய்து கொள்ளுவது போன்ற செயல்களைச் செய்தால், நம் குலத்தொழில்கள் எப்படி முன்னுக்குவரும்? ஒருக்காலும் வரவே வராது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

முக்கிய அவசர அறிவிப்பு.

25 MAY 1955

சென்னை மாகாண மேல் சபை அங்கத்தினரும், மத்திய மகா சங்கத்தின் ஜீவிய ஆலோசகருமான, பிரம்மஸ்ரீ, T. M. தேய்வசிகாமணி ஆச்சாரியார், M. L. C., F.R.S.A. (லண்டன்) அவர்களின் சுற்றுப் பிரயாணத் திட்டம்.

வெளியூர் வாசிகளாகவுள்ள நம் ஐந்தொழில் வல்லோர்களின், வாழ்க்கை, தொழில், பொருளாதார நிலைமைகளை நேரில் அறிந்துகொண்டு அவைகளை உயர்த்துவதற்கான வழி வகைகளை சர்க்கார் மூலமாகவும், மத்திய மகா சங்கம் மூலமாகவும் அதிவிரைவில் தேடித் தரும் முக்கிய நோக்கத்தை அடிப் படையாகக் கொண்டு கீழ்க் கண்ட சுற்றுப் பிரயாணத்தை, 1952, செப்டம்பர் மாதம் 25 தேதிக்கு மேல் சில முக்கிய குலத் தலைவர்களையும் உடன் கொண்டு மேற் கொள்வதென தீர்மானிக்கப் பெற்றுள்ளது. எனவே, கிளைச் சங்கங்களும், சமூக மக்களும் ஏகோபித்து அழைக்குமிடங்களுக்குச் சென்று நிலைமையை நேரில் கண்டறிந்து, அவசியமானல், வாக்கு மூலங்கள் பெற்று அவைகளை அரசியலார் கவனத்துக்கு சட்ட சபை அங்கத்தினர் என்னும் ஹோதாவில் கொண்டு வரப்படும். ஆகவே, நம் குல மக்கள் 'காற்றுள்ள போதே தூற்றி'க் கொள்வார்களாக.

சுற்றுப் பிரயாணத் திட்டம்

(1) வட ஆற்காடு ஜில்லா:—வேலூர், அரக்கோணம், குடியாத்தம், ஆம்பூர், திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆரணி.

(2) செங்கற்பட்டு ஜில்லா:—காஞ்சிபுரம், வாலாஜபாத், செங்கற்பட்டு.

(3) தென்னற்காடு ஜில்லா,—விழுப்புரம், கடலூர், சிதம்பரம், பண்ருட்டி, திண்டிவனம்,

(4) சேலம் ஜில்லா:—சேலம், ராசிபுரம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருச்செங்கோடு, நாமக்கல்.

(5) கோயமுத்தூர் ஜில்லா:—கோயமுத்தூர், ஈரோடு, கோபி, சத்தியமங்கலம், மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை.

(6) நீலகிரி ஜில்லா:—உதகமண்டலம், குன்னூர்.

(7) மதுரை ஜில்லா:—மதுரை, பழனி, திண்டுக்கல், நிலக்கோட்டை, வத்தலகுண்டு, போடி நாய்க்கனூர், பெரியகுளம், கொடைக்கானல, தேவநாயகம்பட்டி, மேலூர்.

(8) இராமநாதபுரம் ஜில்லா:—காரைக்குடி, தேவகோட்டை, விருதுநகர், அருப்புக்கோட்டை.

(9) திருநெல்வேலி ஜில்லா:—திருநெல்வேலி, பாளையங் கோட்டை, கோவில்பட்டி, திருச்செந்தூர், தென்காசி, அம்பாசமுத்திரம்.

(10) திருச்சிராப்பள்ளி ஜில்லா:—திருச்சி, ஸ்ரீரங்கம், முசிரி, லால்குடி, கரூர், குளித்தலை துறையூர், புதுக்கோட்டை.

(11) தஞ்சாவூர் ஜில்லா:—தஞ்சாவூர். மாயவரம், திருவாரூர், பட்டுக்கோட்டை, நீடாமங்கலம், நாகப்பட்டிணம், நாகூர், மன்னார்குடி, கும்பகோணம், பாபநாசம்,

(12) மலபார், திருவனந்தபுரம்:—பாலக்காடு, கள்ளிக் கோட்டை, ஆலப்புழை, திருவாங்கூர், கொச்சி, நாகர் கோவில், கோட்டையம், செங்கோட்டை.

நிபந்தனைகள்.

1. அழைப்புக்களை கிளைச்சங்கமூலமாகவும், பிரமுகர்கள் ஒருங்கு சேர்ந்தும் அனுப்பலாம்.

2. தலைவர்கள் சுற்றுப் பிரயாணமாக வரும்போது ரூ 50க்குக் குறையாமலும், ஊருக்குத் தக்கவாறு ரூ 200 வரையில் பண முடிப்புக் கொடுக்க வேண்டும்.

3. சுற்றுப் பிரயாணம் நான்கு முறையாக 3 ஜில்லாக்கள் வீதம் நடை பெறும்.

4. சுற்றுப் பிரயாணச் செலவு குறைந்தது மூன்றுபேர்களுக்கு ரூ 1500 பிடிக்கலாமென தற்காலிகமாக திட்டமிடப் பட்டிருக்கிறது.

5. குறைந்தது சுமார் ரூ 5000 நன்கொடை சேராதவரையில், வாக்களிக்கப் படாத வரையில் சுற்றுப் பிரயாணத் திட்டத்தை கை விடப்படும். ஏனெனில், மத்திய சங்கத்தின் பொருளாதார நிலை பூஜ்ஜியமாக இருக்கிறது.

6. கிளைச் சங்கங்கள், கிராம, தாலூக்கா நகரவாரியாக பொதுக் கூட்டங்கள் கூடிப் பேசி ஆவன செய்து எழுதக் கோருகிறோம்.

7. அடுத்த விஸ்வகலாநிதி இதழில் பண உதவிக்கு வாக்களிப்பவர்களின் பெயரும், தொகையும் வெளியிடப் பெறும்.

8. நமது வயோதிகத்தையும் பாராது சமூக உயர்வு ஒன்றையே நாடி மேற் கொள்ளும் சுற்றுப் பிரயாணத்திட்டம் இது வென்பதை சமூக மக்கள் ஊன்றி உணர வேண்டுகிறோம்.

T. M. தேய்வசிகாமணி ஆச்சாரியார் M. L. C.
நிர்வாக ஆலோசகர்,

சென்னை 18-8-52 } 29-A, திருவேங்கட முதலி தெரு. பெரிய மெட், பார்க்டவுன் P. O.

குறிப்பு:—மேலே காட்டியுள்ள வரிசைக் கிரமத்தின்படி எழுதிக் கேட்டுக்கொண்டால், வரும் தேதி குறிப்பிட்டு கடித மூலம் தனித் தனியே அறிவிக்கப்படும்.

கி. ஆ.

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

ஆகலான் "குதர்க்கமியற்றும் குலப்பதரொழி"(குலநலச்சுவடி) என்று, இவ்வாசிரியர், குலத்திற்கு வேண்டிய குண நலங்களை யெல்லாம் குறும்புபேசி, அழிக்க எண்ணங் கொண்ட ஒரே குலத்தில் ஒருவனிருந்தால், அவனை, முதிர்ந்த தானிய மணிகளோடு பிறந்த பதரெனக் காற்றில் தூற்றி முறத்தால்புடைத்து குப்பையில்சேர்த்துவிடுவதுபோல் அன்னவனை ஒதுக்கிவிடவேண்டுமென அறுதியிட்டுஉறுதிகூறிவிட்டார்இது நம்மவரில்பலர்இம் மாதிரிஇழிவு கொண்டாடுவதால் இப் பாட்டு அமைந்திருப்பதை உணர்ந்து ஓர்ந்து கொள்ளுக.

விஸ்வகர்ம அறிஞர்களே!

நமது மக்கள் குலப்பதரில்லாது, அறிவு நிறைந்த நூன்முகங்களை ஓர்ந்து, நம் குலப்பற்றைவிடாது, ஒற்றுமைக்கு அடிகோலி உற்ற தொழிலுக்கு ஊக்கம் தேட விதண்டாவாதமில்லாது கல்வி கலாசாரம், கைதொழில், பொருண் முன்னேற்றம் இவைகளுக்கு உறுதிதேடி நல்ல குலப்பண் படைய வேண்டுமென, அண்ணல் விசுவேசுரனை வணங்கி ஆக்கவேலைகளுக்கு அடி கோலுவோமாக. தலைவரைப் பின்பற்றுவோமாக!

தொழிலும் சமூகமும்

ஸ்ரீ. R. வைமாபுரி, மங்களாபுரம்

சுதந்திரம் பெற்ற பாரதவீட்டிலே, குடியரசிலே, வருணாச்சிரமங்கைவிடப்பட்டுமேல்நாட்டு நாகரிகம்வளர, நம் சமூகத்தினரும் இக்காலத்திலே நமது தொழிலும் நமது சமூகப்பண்பும் ஒன்றையொன்று பிணைந்திருக்கவேண்டுமா ? என்பதை சமூகத்தினர் அனைவரும் சிந்தித்து ஒருமுடிவுக்கு வரவேண்டும். இதில்வேறு பல தொழில்களைச் செய்யும் நம் இனத்தவரின் கூட்டுறவு தேவையா? அல்லது வேறு பல இனத்தவரின் தொழில் கூட்டுறவு நமக்குத் தேவையா? அல்லது இரண்டும் இரண்டறக்கலக்கத்தேவையா? எனவும் சிந்திக்கவேண்டும்.

நாகரீகமற்று மிருகவாழ்க்கை நடத்திய மனிதனை நாகரீக வாழ்வு பெறச்செய்தான் விஸ்வகர்மன்! ஏன், மணிக்கு மூவாயிரம் மைல்களைக்கடந்து செல்லும் இந்நாகரீக காலத்திலும் மனிதன் நாகரீகமாக உயிர் வாழ விஸ்வகர்மத் தொழிலே மூலகாரணம் என்பதை யார் மறுக்கமுடியும்? இதனாலன்றோ இவன் விஸ்வகர்மன், உலக தொழிலாளன் என அழைக்கப்பட்டான், எனினும் இவன் மணிக்கு மூன்றுமைல்கள்தான் வாழ்க்கைப்பாதையில்சென்று கொண்டிருக்கின்றான்.

ஆனால் இச்சமூகத்தினர் கற்காலம் தொட்டு பொற்காலம் வரை, அஜாந்தா காலத்தில் அமைதியுற வாழ்ந்தனர். எல்லோரா காலத்தில் இன்பமுற வாழ்ந்தனர். ஹாரப்பாவில் ஆக்கமுறவாழ்ந்தனர்.மெகதஞ்சதரோ காலத்தில்மேன்மையுற வாழ்ந்தனர். அரசாங்கத்திலே முதலங்கம் முன் வகித்தனர். வேலையற்ற வாழ்விலே கலைகள் சிறந்தன என்பதற்கு இவைகள் சான்றன்றன்றோ. இங்ஙனம் மாந்தைபட்டணத்தில் காந்தகோட்டையில் சாந்தமுற விளங்கியவர் ஆரிய திராவிட இன வேற்றுமையால் அரசர்களுக்குள் கலகத்தால், சூட்சியாளரின் சூளுரையால், சூழுவளியால் எதிர்பாரா இன்னலுற்றனர்; சிதைந்தனர்; சின்னாபின்னமாயினர். சீனதேசம் சென்றனர். ஸிந்துவையும் கடந்தனர். காசிக்கும் சென்றனர். காஞ்சிக்கும் சென்றனர் என உயர்திரு K. K. சுப்பிரமணிய ஆச்சாரியார் அவர்களின் ஆய்வுரையும் அறிவிக்கிறது.

பிறகு சேர சோழ பாண்டிய மன்னர்களால் சிறப்பிக்கப்பட்டோம். நாம் சிறந்தோம்; நம் தொழில் சிறந்தது. மக்கள் சிறந்தனர். கவலையற்ற வாழ்விலே கலையுள்ளம் கனிந்தது. மலைக்கோயில்கள் கட்டி முடிக்கப்பட்டன. பிரகதீஸ்வரர் ஆலயம் பிரும்மாண்டமாய் எழுந்தது. அரசனைக்காக்க அரண்மனை அமைந்தது. பீரங்கிபிறந்தது.பெரிய தேர்கள் உருண்டன. விக்கிரகம் வார்த்தனர். வேதனைகள் தீர்த்தனர். அணிகளைச் செய்தனர். அழகுப்பணி புரிந்தனர். இந்த காலம்வரை. அந்தந்த தொழில்கள் அந்தந்த சமூகத்திற்கு வார்சு உரிமையாக்கப் பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பிறகு தென்னாட்டைப் பொறுத்தவரை ஹைதர் அலி ஆட்சியும், ஆங்கிலக் கம்பெனி ஆட்சியும் நம் வாழ்விற்கு ஏன் மக்கள் வாழ்விற்கு பல கஷ்டங்களை உண்டாக்கினர். பிறகு மகாராணி ஆட்சிமுதல் ஆங்கில ஆட்சி கடைசிவரை மக்கள் சிறிது சிறிதாக நல்வாழ்வடைந்தனர்.இதோடுசுயாட்சிக்கிளர்ச்சியும் எழுந்தது. இக்காலங்களில்அதாவது, கடந்தஇரண்டு மூன்று தலைமுறைகளில் மக்களின் வாழ்வில் காடு நாடாகியது. நாடு காடாகியது. வீடு மேடாகியது. மேடு வீடாகியது. மேலும் ரஷ்யதூதர்கள் குறிப்பிட்டதுபோல் இந்தியாவில் மேடு மேலும் மேடாகிக் கொண்டிருக்கிறது; பள்ளம் மேலும் பள்ளமாகிக் கொண்டிருக்கிறது. பொருளாதாரத்தில், ஆனால் பள்ளங்களாக தெரு அமையப் பெற்றவர்கள் மாத்திரம் காங்கிரஸ் ஆட்சியில் மேடாகப்பெற்று வருகின்றனர் என்னலாம். ஆனால் மேடுமல்லாமல், பள்ளமும் அல்லாமல் மட்டமான தரைகள் மேலும் தரை மட்டமாக்கப் படுவதால் திணறுகின்றனர். விழி தெரிந்தும் வேறு வழியின்றி கிணற்றிலேயே விழுந்து கொண்டிருக்கின்றனர்.

ஆம், இந்த நிலைதான் இந்திரஜித்துக்கு ஏரோப்பிளேன் செய்துகொடுத்த தொழிலறிவு மிக்கசமூகம் கட்டைவண்டியை விட்டு கடைத்தேற முடியாத நிலை உண்டாக்கியுள்ளது. இது மட்டுமல்ல. கல்வியில்லை, செல்வமில்லை, கண்ணியமில்லை, சர்க்காருக்கும் நம்மிடம் காருண்யமில்லை. இது பற்றி நம் மக்களில் பலருக்குக் கவலையுமில்லை. ஏன்? லட்சியங்கள் சிதைந்துவிட்டன. எண்ணங்கள் மறைந்துவிட்டன. சிந்தனை தேய்ந்து விட்டது. ஏன்,

எண்ண நேரம் ஏதேனும் இருந்தாலும் அது கவனமிழந்து கைவிடப்படுகின்றது. விஸ்வகர்மர்கள் எல்லோருக்கும் இப்படித்தானென்றால், அநேகமாய் இப்படித்தான். ஆனால், நம் தலைவர் போன்ற அறிவாளிகளும், செல்வச் சீலர்களும் ஒன்றுதிரண்ட சேவை சமூகத்தையும், தொழிலையும், இதர தொழிலாளர்களையும் பிணைத்த ஒரு பலத்த ஸ்தாபனம் சமூக மக்களுக்கு மட்டுமல்லாமல் ஏனைய மக்களுக்கும் நல்வாழ்வளிக்கும் என்பது உறுதி. ஆம், நம்மத்தி மகாசங்கம் இதனை சாதிக்கமுடியும் என்பதும் உறுதி. இச்சங்கத்தில் யார் யார் அங்கத்தினராகலாம் என்பதையும் மேற்கண்ட பிரச்னையை தீர ஆலோசித்து ஒரு முடிவு கூறவேண்டும். அடுத்த கட்டுரையில் நானும் ஓர் முடிவு கூறப்போகிறேன். அனைவரும் யோசிங்கள்!

பூங்காவில் பூத்தமலர்

புள்ளம்பாடிக் கிள்ளை மொழியார்

மஞ்சுலாவும் மலைகளாலும் நதிகளாலும் சூழ்ந்த நிலவளம் பொலிந்த பூஞ்சோலையில் செழிப்பமைந்த பூந்தருக்களில், கிளையெங்கும் அரும்புகள் அரும்பி பல வண்ண மலர்கள் மலர்ந்துதன் முருகமைந்து இன்பந்தரும் எழிலுடைமலர்களில், பொறிகொண்ட அரியினங்கள் அம்சிற குதறி ரீங்கார (ஓங்கார) சப்தத்துடன் உலாவிக்கள்ளுண்டுமயல் கொண்டு மகரந்தப்பொடியை வவ்விக்கொண்டு போந்தவும், துடியிடையும்தண்டெனத்துவண்டமேனியும்அன்னநடையும் கன்னல்மொழியும் கார்நிறக்குஞ்சியும் கணவர்கள் கருத்தவிழ் கண்ணொளி சாயலையுடைய இளமங்கையர்கள் சூழ்ந்து மலர்களைக்கொய்து வண்ண வண்ண மாலைகள் தொடுக்க மலர்களெடுக்கும் பூங்காவினில், ஒப்பற்ற உயர்குணம் படைத்த ஒள்ளிய மனோரஞ்சித மலரொன்று இயற்கையாயிருக்கத்தான் வேண்டும். அம்மலர் தனது இயற்கையின்குணம் மக்கள் எடுத்து முகரும் போழ்து தன் மனத்திற்கு எந்தெந்த மலர்களுடைய நறுமணத்தைச் சிந்திக்கின்றார்களோ அந்தத்தன்மையாகவே அது பரிமளிக்கின்றது. ஆனால் தன்பக்கலில் சூழ்ந்திருக்கும் பூக்களில் கந்தங்கள் மிகுந்திருப்பினும் தனது உள்ளமைந்த குணம் மட்டும் பிரதிபலிக்காதது ஏன்?

மக்கள் மனத்திற்கு இசைந்த வண்ணம் இன்பந்தரும் வண்மையுடையதஃது. பரந்த பாரதநாட்டின்கண் மக்கள் பல வண்ணங்களாக வாழ்ந்து வருவது கண்கூடாயினும் நமது விசுவகுலமக்கள் ஐந்தொழில் மூலமாக மன்பதை மக்களுக்கு மாண்புற இயற்றி இன்பமுடன் வாழ்ந்து எழில்மிகு வமிசத்தினராய் பல ஆன்றோர்கள் திருவாக்கின்படி நாம் அமைந்தது உண்மையாயினும், இயற்கைக்கு நாம் என்னிலையில் வாழ்கின்றோம், வாழப்போகின்றோம் என்பதை நம் மக்கள் இமையளவேனும் சிந்தனையில் நினைக்காது வாழ்வைக் கடத்திவருவதை, அறிவும் ஆற்றலும் படைத்த அறிஞர்கள் இன்றுவரை திறம்பட ஏட்டில் தீட்டிவந்தும், நம்மக்கள் அயர்வும், அயர்ச்சியும் அடைவதைக்கண்டு நம் பெரியோர்கள் மனம் நலிந்து சிதைவடைந்து வருகின்றது. அந்நிலைமையில் விடாது நம் சமுதாய மக்கள் வாழ்க்கையைத் தேட பல சாதனங்களிருப்பினும் முக்கியம் வாய்ந்தது எதுவெனக் கருதி நம் முன்னேற்றத்திற்கு அரிய துணை மலர் (மனோரஞ்சிதம்) நினைத்ததையளிக்கும் ஆற்றலுடைதென உணரவேண்டும்.

பயமறியா இளங் கன்றுகளே! வருங்கால அமைப்பில் ஆக்கமடைய ஆர்வங்கொள்ளும், பீடுடை மக்களாய்த்திகழ நுங்கள் கடமையாய்த் தொடர்ந்து வருமிக்கால நிலையில் பேதை மக்களாய்ப் பிழைப்பட்டு பேதித்து நிற்பது பெருங்கேடு விளைந்து விடுமெனஆராய்ந்து தக்க பொருளைத் தேடித்தர நும் தந்தையர்கள்பால் 'தந்தை மகற்குச் செய்யுமுதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்னும் வள்ளுவர் குறளை நன்றாய் படித்து, அப்பா! எங்களை அறிவிழந்தமக்களாய்ப் பெற்றபயன் என்னவோ, எங்களுடைய இளம் பருவத்திலேயே குலத்தொழிலீடுபட்டுஉழைத்து அல்லல் அடையநாங்கள் பிறந்திருப்பினும், உலக அனுபவ முதிர்ச்சிக்கு அறிவு வேண்டாமா? அறிவுக் கண்ணென்று ஆண்டவன் அருளப் பெற்றும், கண்ணிழந்த கபோதியாக்கி கடைமக்களென கல்வி கற்றோர்களால் எள்ளி நகையாடும்படி வைப்பது தந்தையின் கடமையென்றோ உங்களை எங்களுக்கென்று ஆண்டவன் படைத்திருப்பான்! அன்று அன்று பாபம். உங்களுடைய அறிவின்மையாலும் தாரித்திரியக்கொடுமையாலும், எங்களை இழிமக்களென தீ நரகில் தள்ளுவது போல் தள்ள வேண்டாம். உலக அனுபவம் நிறைந்த அறிஞர்கள் பண்படுத்தி பல மலர்கள் பூக்கும், பூஞ்சோலைகளாகஅமைத்துஅதில் மலரும்மலர்களை மக்களுக்கு ஈந்து, அதனை தன் நறுமணத்தைஉணர்ந்துஅவ்வாசனைகளின் இன்பத்தைக்கண்டு களித்து சமூகமாகவாழ்க்கைப் பயனை அனுபவிக்கின்றார்கள். அவைபோல் எங்கள் மனதிற்கும் மணத்திற்கும் இன்பந்தரும்வாழ்வைநடத்தஎங்கள்பால் கண்ணோட்டம் வைத்து, உலகமக்களோடு ஒப்ப உயர்த்த வேண்டும் தந்தையே யென்று, மடிபிடித்து ஏன் கேட்கக் கூடாது யென நான் உங்களைத் தட்டி யெழுப்புகின்றேன்.

விசுவகுல மாணவ மாணவிகளே! ஒரு பூஞ் சோலையில், மனதிற்கு இன்பந்தரும் பல மலர்கள் மலர்ந்து, தன் தன் வாசனையைக் கொடுப்பினும், அம் மலர்களின் வாசனையை ஒரே மலரான மனோரஞ்சிதத்தைக் கொய்து முகர்ந்தால், மற்ற மலர்களின் கந்தத்தை நம் மனோபாவத்தன்மையின்படி அடையயேதுவான அம் மலரை அங்கையில் கொண்டு அன்புடன் முகர்ந்து அழகு படச் சூட்டி ஆனந்தமடைவது உங்கள் கடமையல்லவா?

அந்த மலரைத் தேடவேண்டுவதில்லையே! நம் மக்களுக்காகவே அது முளைத்துத் தழைத்து அரும்புகள் விட்டு மலர்ந்து தனது அரிய குணத்தை நம் தலை வாசலில்வந்து இனிய மணம் வீச வருகின்றது. அதை பொருள் கொடுத்து வாங்கி அதன் அருமை யறிந்து இன்பத்தை இடை விடாக் களிப்படையலாமே!

உங்களுக்கு அம் மலர் வேண்டற்பாலுடைதா! இல்லையா? அது நம் மக்கள் யாவருக்கும் பலன் கொடுத்து பிழைப்புக்கும் பிறப்புரிமைக்கும் வழிகாட்டியாயமைந்த சுதந்திரநாட்டில் பூத்த புதுமலரல்லவா?

விசுவகுல மக்களே! உங்கள் சின்னஞ் சிறு மக்கள் ஆண் பெண் இருபாலருக்கும் வாங்கிக் கொடுங்கள். அன்னவர்கள் அழகுபட தொடை

தொகுத்துத் துங்கமிகு திறம் கொண்ட முடிமீது அணிந்து ஆர்வங்கொள்ளட்டும். ஆகனல் உங்களுக்கு ஆன பொருள் செலவாகுமா? அல்லது அறிவிழக்குமா? உங்க்ளுக்கும் அறி வூட்டுமே 'ஏ; (கூவி) விசுவகுல மக்களே, உணர்ந்து நோக்குங்கள். அழகு வாய்ந்த அரிய குணமுடைய மலரைச் சூட்டி நல்ல பழக்கம் செய்துக் கொள்ளுங்கள். உங்கள் மக்களுக்கும் தூண்டு கோலாகத் தட்டியெழுப்புங்கள், வணக்கம் செய்கின்றேன்.

நாள் முழுதும் உழைத்து உழைப் பிறகுத் தக்க ஊதியம் கிடைக்கவில்லையே யென அயர்ந்து அடுகலம் பாழ் பட்டு அவதி யுற்றக் குடும்பமாயினும், காலை முதல் இரவு இரண்டுமணி வரை அரீதப் புகைப்பிடித்தல்,புகைப்படக்காணல் செலவுகள் செய்து வரும் விசுவகுல மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு நான்கணு வீதம் தமது மக்களுக்கும் தனக்கும் அருந்துணையாக அமைந்தமனோஞ்சித மலரை வாங்கித் தலையில் சூட்டித் தனது வாழ்க்கையின் அழகைக் கண்ணாரக் கண்டு களிப் பேருவகையை யடைந்து பண்பையும், பயனையும் அடைய வேண்டாமா? உலகத்தோடொட்ட வொழுகல் பல கற்றும் கல்லாறி விலாதார்—வள்ளுவப் பெருந்தகையனர் கூறுவான்போல், எவ்வளவு கற்றவனுக எண்ணி பயனுறவாழா தான் பேச்சளவில் எவ்வளவு பேசினுலும் பயன் கண்டல் அரிது. உலகமக்கள் அனுபவிக்கும் வழியில் ஒட்டி நடந்தால்தான் அவன் திறவியானுலும் உலகோடு பொருந்தினவனுவான். அப்படிக் கல்லாதவனை மக்களால் எள்ளி நகையாடி துரத்தப்படுவான். ஆகலான் விசுவகுல மக்களே, உலகமக்கள் வாழ்க்கையைப் பார்த்தாவது நமது வாழ்க்கைக்குப் பலன் தேட வேண்டும்.

பாரத நாட்டின் பூஞ்சோலைகளில் பல மலர்கள் தோன்றி வருவதைக் கண்டு எதிர் பாராது (கடன் பட்டா ..து) காதல்கொண்டு காசு கொடுத்து வாங்கி பகலிரவாக ஆழ்ந்த சிந்தனையில் அதன் (வேறு மலர்களின்) வாசனைகளை நுகர்ந்து வருகின்றோம். அம்மலர்களால் நம் வாழ்வுக்குப் பயன் கிட்டுகின்றதா? ஒருக்கால் பயன் படுவனவாயினும் சரி, அம்மலர்களிடை எவருக்கும் காதலாயினும் சரி, விசுவகுல மக்கள் வாழ்க்கைக்கும் தொழிலுக்கும் நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும நம் மக்கள் பயனுற்று வாழும்படி கட்டி எழுப்பி தனக்கென வரித்தல்வேண்டும் அம்மலர்கள்.

சுதந்திர இளமாப் பூங்காவில் நடு நாயகமாய் அமைந்த இனிய மலரை நம் மக்கள் உவந்தெடுத்து முகர முகரத் தான் வாசனையை அவரவர்கள் உள்ளத்தின் மனோரதமான வாழ்வுக்குப்பயன்பெரு மார்க்கங்களமைந்த ஏடவிழ் இன்பமலர், அது தவத்தால் வந்தது. மாபெருஞ் சோலையில் மதிக்கப் பெறுவது. எழில் மிகுவண்ண இதழ்களால் அலங்கரிக்கப் பட்டது. தேனினுமினிய தீஞ்சுவையுடையது. அது தான் எது? மணமிகு மலர்!! அதுவுமில்லை! பின் எது மனோஞ்சிதம் எது? அதுதான் நமது குலமலர் "விஸ்வகலாநிதி"

——

பட்டிணத்துச் செய்திகள்.

கதம்பம்

ரெட்டணை R N. சங்கரன்.

குலோத்தாரகர் வாழ்க! என்னும் கோஷம் சென்னை வண்ணாரப்பேட்டை தியாகராயசெட்டியார் கல்லூரியில் 27-7-52 அன்றுகாலை முழங்கிற்று. வண்ணாரப்பேட்டை விஸ்வபிராமண கிராமதிகாரகமிட்டியார் ஸ்ரீ T.M. தெய்வசிகாமணி ஆச்சாரியார். அவர்களுக்கு ஒரு வாழ்த்து பசாரப்பத்திரம் வாசித்து அளித்த சுபதினம் அன்று அந்த கூட்டம் முடிந்து திரளான சிறுவர் சிறுமிகள் வாலிபர்களும்மோட்டாரைச் சூழ்ந்து நின்றுகொண்டார்கள். கூட்டம் முடிந்து குலோத்தாரகர் விடை பெற்றுக் கொண்டு வெளிவரும் போது குலோத்தாரகர் வாழ்க, குலோத்தாரகர் வாழ்க, என்ற ஓசை, அந்தப் பள்ளிக்கூட மைதானமே பிரதி பலித்தது.

மேற்படி கூட்டத்திற்கு நான் காலை 8½மணிக்குச் சென்றேன். அமோகமான வரவேற்பு. நான் பள்ளிக்கூடத்தினுள் நுழையும்போது சுமார் முப்பது ஆண் பெண் வாலண்டியர்கள் இருவரிசையாக நின்று கொண்டுகைகூப்பி நமஸ்கரித்தார்கள். நான் திடுக்கிட்டுப் போனேன். ஒரு வேளை இவர்கள் எனக்கு முன் பின் தெரிந்தவர்களாக இருக்கக்கூடும் என்று சந்தேகப்பட்டுக் கொண்டே நின்றேன்.

இதற்குள் எனக்குப்பின்னல் வந்து கொண்டு இருக்கும் அனைவருக்கும் இச்சிறுமிகள் நமஸ்த்தே போட்டு வரவேற்றார்கள். அப்பொழுது தான் என்னுடைய ஐயப்பாடு அகன்றது. பிறகு ஹாலுக்குள் சென்று உட்கார்ந்துகொண்டேன். சரியாக பத்துமணிக்கு எழுந்து கூட்டத்தைப் பார்த்தேன். ஏராளமான ஆண்களும் பெண்களும் அமைதியாக மலர்ந்த முகத்துடன் காக்ஷியளித்தார்கள். மண்டபத்தில் கூட்டமும் நிறைந்திருந்தது.

அப்பொழுது எனக்குஒன்று நினைவுக்கு வந்தது. விஸ்வகர்ம இரண்டாவது அரசியல்மகாநாடு கூடிய மெமோரியல் ஹாலில் M. K. தியாகராஜ பாகவதர் பேசியபொழுது சினிமா நடிகர்கள் பெயரை வால்போஸ்டர் நோட்டீஸ்களில் போட்டால் தான் கூட்டம் நிறைகின்றது; இல்லையேல் இல்லை என்றார். மேற்படி வாழ்த்துபசாரக் கூட்டத்திற்குஎந்தசினிமாநடிகர்கள் பெயரையும் வால்போஸ்டர் நோட்டீஸில் போடவில்லை. இதனல் கூட்டமும் குறையவில்லை, நிறைந்தேயிருந்தது.

தாங்க முடியாத மாலை.

அவ்வமயம் நம் பெரியாருக்கு ஒரு பெரிய ரோஜா மாலையை கழுத்தில் அணிவித்தனர். ஒன்றரை அடி வட்டமுள்ள புஷ்பச் செண்டும்கொடுத்தனர். புகைப்படமும் எடுக்கப்பட்டது. இதனல் பெரியார் மூன்று நிமிஷ நேரம் அந்த மாலையைத் தாங்கிக் கொண்டு நிற்க வேண்டியதாயிற்று.

பிறகு பெரியார் நன்றி கூறுகையில், எனக்கு தாங்கமுடியாத மாலையை அணிவித்து என்னை கௌரவித்ததற்கு எனது மனங்கனிந்த நன்றி என்றார்.

இருபத்து ஐந்து லக்ஷம் ஜனத்தொகை கொண்டவிஸ்வகர்ம சமூக மக்களின் உயரிய சேவையாகிய பளுவை அஞ்சாமலும் வீரியத்துடனும் தாங்கிக் கொண்டுவரும்இவருக்குமூன்று

வீசை எடையுள்ள ஒரு ரோஜா மாலை அவ்வளவு பெரிய பளுவு ஆகாது என்பது எனது அபிப்ராயம். சபையின் அபிப்ராயமும் அதுவே.

பண்டிட் பேசினர்.

காந்தியடிகளின் சீடரும் நம்மவரில் ஒருவரான பண்டித வி. நடேசன் அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பாளர்கட்கும் மற்ற ஏழை எளியவர்கட்கும் கல்வி முறையை இலவசமாக போதிப்பதாகவும் இன்னும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாகவும்சுமார் 500 பிள்ளைகளுக்கு அன்னம்வழங்குவதாகவும் அவருடைய பிரசங்கத்தில் இதையும் ஒரு பிரசாரமாக குறிப்பிட்டார்.

ஸ்ரீ நடேசன் அவர்கள், நமது ஏழைப்பிள்ளைகளில் ஒருவருக்காவது இவர் சோறு போடுவதாகவோ அல்லது மற்ற சகாயம் செய்து கொடுத்ததாகவோ குறிப்பிடவில்லை. அது நிற்க, நம்மவர்களில் படித்து பட்டம் பெற்று பணக்காரராக இருக்கும் சிலருக்கு நம்மின ஏழைகளை கண்டாலே பிடிக்காது. அவர்களுக்கு எந்தவித உதவியும் செய்வதுங்கிடையாது. இச் சம்பவம் இன்று வரை நடைமுறையில் இருந்துவருகின்றது. இதனை பெரம்பூர் ராமகிருஷ்ண ஆலையில் கண்ணாரக் கண்டு தெளியலாம்.

குலோத்தாரகர் வருகை

சரியாக 9மணிக்கு குலோத்தாரகர் மோட்டார் கல்லூரி கட்டிடத்திற்குள் நுழைந்தது. ஜெய கோஷமும், வாத்திய கோஷமும் முழங்கின. வாலண்டியர்கள் வரவேற்றனர். பூரணகும்பம்ஹாலில்நிறுவப்பெற்றிருந்தது. நந்தா விளக்குகள் இருபக்கமும் எரிந்து கொண்டிருந்தன. பூரண கும்பத்துடனும், வேதபராயணத்துடனும், குலோத்தாரகரை 5 வைதிக பூமான்கள் வாத்திய கோஷம் முழங்க எதிர்ச் சென்று வரவேற்றனர்.

அவைத்தலைவர்

உயர்திரு. T. ஷண்முகம் பிள்ளை M.L.A. அவர்கள் சபைத் தலைமை தாங்கினர். தலைவர் முன்னுரைக்குப் பின் சென்னை கார்ப்பரேஷன் கௌன்சிலர் C. பார்த்தசாரதி நாயகர், பிரசங்க ரத்னகரம் இரத்தின சபாபதி நாயகர், N. உமாபதி ஆச்சாரியார், M.A. பண்டிட் V. நடேசன், N. நல்லையா, N. பாலசுந்தரம் ஆகியோர் புகழ்மாலை சூட்டினர்கள்.

வாழ்த்துபசாரப் பத்திரம்

கிராமாதிகாரக் கமிட்டி தலைவர் ஸ்ரீ. பழனி ஆச்சாரியாரால் வாழ்த்துப் சாரம் வாசித்துக் கொடுக்கப் பெற்றது.

காலம் மாறிவிட்டது.?

திருவல்லிக்கேணி திறந்த வெளி அரங்கில். சென்னை. நாடகக் கழக உதவி நிதிக்கு ஸ்ரீ. M. K தியாகராஜ பாகவதரின் நடித்த நாடகத்திற்கு N. S. கிருஷ்ணன் தலைமை வகித்தார்.

தியாகராஜ பாகவதர் நடிக்கும் நாடகத்திற்கு N. S. கிருஷ்ணன் தலைமை வகிப்பது? அவர் ரஷ்யா சென்றுதிரும்பியதால் தலைமை தாங்கும் பெருமை உண்டாகியது, என்றும் பேசிக்கொள்ளப்பட்டது.

டம்பாச்சாரி.?

சென்னை. சூளையில் B. & C. மில் தொழிலாளர் சார்பாக நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில், முதன் மந்திரி ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரியார் பேசுகையில் மதுவை ஒழித்து விட்டேன், இனி பொது ஜனங்கள் என் சொற்படி நடந்தால் கூடிய சீக்கிரம் சினிமாவையும் எடுத்து விடுவேன். ஆகையினல் நீங்கள் இனி சினிமாவிற்குபோகாதீர்கள்; ஏன் என்றால், முன்காலத்தில் எல்லாம் டம்பாச்சாரி நாடகபோன்ற புராண நாடகம் நடந்தது. இப்பொழுதோ ஆபாசமான படங்களெல்லாம்வெளிவருகின்றன. இதனல் நான் நிச்சயமாக சினிமாவை எடுத்துவிடப் போகிறேன் என்று பயமுறுத்தினர்.

டம்பாச்சாரி, நாடகத்தைப் பார்க்க தற்காலத்தில் அவ்வளவு ரசிகர்கள் இல்லையாதலால் படமுதலாளிகள் புது முறையைக் கையாளுகிருர்கள். இதைப்பற்றி, ராஜாஜி கூறுவது ஏதோ பயமுறுத்துவது போல் தோன்றுகிறது. ஏனெனில் சினிமாவை எடுத்துவிடப் போகிறேன் என்று சொல்லுவதை விட புராணப் படம்தான் பிடிக்கவேண்டும் என்று கண்டிப்பான உத்திரவு போட்டால், அது எவ்வளவோ நன்ருக இருக்கும்!

சந்தா பெருமலே ?

விஸ்வகலா நிதி பத்திரிகையை சந்தாபெருமலே விலாசம் தெரிந்தவுடன் அவ்விலாசத்தாருக்கு அனுப்பப்பட்டு வருகிறதை நான் அறிவேன்.

விஸ்வகர்ம மக்களில் பெரும்பாலோர் முன்பணம் செலுத்தி சந்தா சேர இயலாது. ஆகையினல் குல முன்னேற்றத்திற்கான இப்பத்திரிகையை முன்னதாக அனுப்பினல், பத்திரிகையை பெற்றுக் கொண்டவுடன் அவர்களே நேர்முகமாக சந்தா செலுத்தி விடுவார்கள். என்ற குலாபிமான நம்பிக்கையே இதற்கு காரணம்.

ஹிந்தி பெயரை ?

திராவிடக் கழகத்தாரின் ஆகஸ்டு புரக்ஷியில் ஒன்ருன இந்தி ஒழிப்பு திட்டம், வெகு விமரிசையாகவும் கேள்ப்பார் அற்றும் நிறைவேறியது. இச் செய்திபோலீசாருக்குதெரிந்து இருந்தும் யாரையும் கைது செய்யப் படவில்லை.

தென்னிந்தியாவிலே குற்றவாளிகள் மிதமிஞ்சி இருப்பதினல் சிறைச்சாலைகளில் இட நெருக்கடி ஏற்பட்டு இருக்கலாம். அரசாங்கத்தில் போதிய பணம் இல்லாத காரணத்தால் கைதிகளுக்கு சோறு போடா முடியாமலுமிருக்கலாம். இன்னிலையிலே திராவிடக் கழகத்தினரை கைது செய்து சோறு போட்டு அடைத்துவைத்திருப்பதை விட சும்மா விட்டு இருப்பதே சுகம் என்று இருந்துவிட்டார்கள்!

விவாகப் பொருத்தம் ?

சென்னையில் நடந்த மாதர் மகா நாட்டில் 18 வயதுள்ள பெண்ணுக்கு 25 வயதுள்ள மாப்பிள்ளையைப்பார்த்து தான் விவாகம் செய்து முடிக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் இன்பமாக வாழமுடியும். என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள்.

இருபத்தி ஐந்து வயதுள்ள ஆண்மகன் 18 வயதுள்ள

பெண்ணை மணக்க வேண்டும் என்றால் 45 வயதுள்ள ஒருவர் முதல் தாரமோ மூன்றாம் தாரமோ விவாகம் செய்து கொள்ள விரும்பினால் அவருக்கு 18 வயதுள்ள பெண்ணை கொடுக்கமாட்டார்கள். ஆகவே அவர் வயதிற் கேற்ப 35 வயதுள்ள ஒரு பெண்ணைப்பார்த்து தான் அவர் விவாகம் செய்துகொள்ள வேண்டும். மேற்படி தீர்மானத்தைக் கொண்டுபார்த்தால் 45க்கும் 35க்கும் இணைப்பது தான் விவாகப்பொருத்தமாகும்போல் தோன்றுகிறது!

முனிசிபல் தேர்தலும்— சமூக எழுச்சியும்

(புரந்தரன்)

சென்னை ராஜ்யத்திலுள்ள முனிசிபல் சபைகளின் தேர்தல்கள் நிகழும் செப்டம்பர் மாதம் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ராஜ்ய சர்க்கார் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை தினசரி செய்தித் தாள்களிலிருந்து அனைவரும் தெரிந்து கொண்டிருப்பீர்கள். 1920ம் வருஷத்திய ஜில்லா முனிசிபல் சட்டம் இயற்றுவதற்கு முன்பு அந்தந்த ஜில்லா கலெக்டர்கள் ஒவ்வொரு முனிசிபாலிட்டிக்கும் நாமினேஷன் மூலம் முனிசிபல் கவுன்சிலர்களை தேர்ந்தெடுத்து வந்தார்கள். பிறகு ஸ்தல சுய ஆட்சி அளிக்கபபட்டு, ஜில்லா முனிசிபல் சட்டம் இயற்றியபின் தேர்தல்கள் நடைபெற ஆரம்பித்தன. முன்னர் நடைபெற்ற தேர்தல்கள் எல்லாம் வரிகொடுத்தவர்கள் மட்டும் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டனர். கலெக்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது நம் சமூக மக்கள் கல்விப்பயிற்சி இல்லாமலும் வெளிவிவகாரங்களை தெரிந்து கொள்ளாமலும் நமக்கும் தேர்தலுக்கும், சம்பந்தம் என்ன என்று இருந்ததால் நம்மவர்களைப்பற்றி ஜில்லா கலெக்டர்கள் அதிகம் தெரிந்துகொள்ள இயலவில்லை. அவ்வதிகாரிகளுக்கு எடுத்துச்சொல்ல நம் சமூகத்தில் தகுந்த செல்வாக்குள்ளவர்களும் இல்லை. தேர்தல்கள் நடைபெற ஆரம்பித்தபின் தேர்தலில் செலவு செய்வதற்கு வசதியில்லாத நம் சமூகத்தினர் பிரயத்தனப்பட்டபொழுது சமூக மக்கள் தகுந்த ஆதரவு அளிக்காததாலும், தகுந்த ஆதரவு உள்ளவர்கள் தேர்தலுக்கு நிற்பதற்கு முன்வராததாலும், மற்ற சமூகத்தினர் அவற்றைக்கைப்பற்றி தப்பித்தவறி தேர்தலில் நின்றாலோ அவர்களைப்பார்த்து நம் சமூகத்தினர் தூற்றிக்கொண்டுஇருந்தார்களே தவிர நம் உரிமைகள் பறிக்கப்படுகின்றனவே என்ற எண்ணம் தோன்றவில்லை. காரணம் அறியாமையே.

எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டு 1941ல் நடைபெற்ற முனிசிபல் தேர்தலில் நம் சமூகத்தினரில ஒரு சிலர் சிற்சில இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதிலிருந்து நம் சமூகத்தினர் கல்வித்துறையில் எவ்விதம் இருக்கிறார்கள் என்பதை சிந்திக்கவேண்டுகின்றேன். இவ்வாறு வாழ்நாள் பூராவும் நம் சமூக மக்கள் பிறருக்காக விட்டுக்கொடுத்தும் போதிய பொருளாதார வசதியில்லாமலும் இன்னும் இருந்துகொண்டிருப்பார்களேயானால் என்றைக்குத்தான் சுய உணர்ச்சி ஏற்படப்போகிறது என்று உங்களை கேட்க விரும்புகிறேன். இந்நாட்டில் ஒவ்வொரு சமூகத்தாரிடையேயும் சுய உணர்ச்சி ஏற்பட்டு தங்கள் தங்கள் சுயதேவைகளை பூர்த்தி செய்துகொள்ளும் காலத்தில் நம் மக்கள் பழங்கதைகளை பேசித்திரிந்துகொண்டிருந்தால் நம் உரிமைகளை நாம் எவ்வளவு இழந்து கொண்டிருக்கிறோம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டுகிறேன்.

ஆனால் இப்பொழுது நடைபெறப்போகும் தேர்தல் முன்போல படித்தவர்களுக்கு மட்டும் அல்ல. வயது வந்தோர் அனைவரும் ஓட்டளிக்க உரிமை பெற்றவர்கள். இதில் ஆண் பெண் இருபாலரும் வாக்குரிமை பெற்றவர்கள். இச்சமயத்திலாகிலும் நம் சமூக மக்கள் தெளிவடையவேண்டும். முன்போல நமக்கென்ன என்று சும்மா இருக்கக் கூடிய காலமல்ல. இனியும் தூங்கினால் நம்மைப்போல் ஒரு முட்டாள்தனமான சமூகம் 1952ம் ஆண்டில் இருக்கிறது என்று பிறர் பரிகசிக்கக் கூடிய ஓர் பட்டத்தைத் தான் பெறவேண்டும். இத்தேர்தலில் ஒவ்வொரு சமூகமும் வரிந்து கட்டிக்கொண்டு பிரசாரம் செய்ய இறங்கிவிட்டது. சிலர் கட்சி சார்பாகவும் சிலர் அந்தந்த தொகுதிகளில் செல்வாக்கு அடைந்திருப்பதால் தனிப்பட்ட முறையிலும் நிற்பதற்கு தயார் செய்துகொண்டு விட்டனர். காரணம், ஒவ்வொரு சமூகமும் கட்சி ரீதியிலும், தனிப்பட்ட முறையிலும் முன்னேற வேண்டுமென்று முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இதில் எவ்வித தவறும் துவேஷமும் இல்லை. இதைத்தான் விஸ்வகர்மர்கள் ஞாபகத்தில்வைத்துக்கொள்ளவேண்டும். கட்சி சார்பாக ஒவ்வொரு முனிசிபாலிட்டியிலும் நம் சமூக அபேக்ஷகர்கள் நிற்கட்டும். அவ்வாறு நிறுத்தப்படாவிட்டால் சமூகச்சங்கங்கள் சார்பாக நிற்கட்டும். ஆனால் ஒரே தொகுதியில் நம்மிடையே ஒருவர்க்கொருவர் போட்டி ஏற்படக்கூடாது. அதை நாம் தடுக்கவேண்டும். ஒவ்வொரு முனிசிபாலிட்டியிலும் எத்தனை ஸ்தானங்கள் பெற முடியுமோ அத்தனையும் பெற முயற்சி எடுக்க வேண்டும். அதற்கு சமூகமக்களின் ஆதரவும் பொதுமக்களின் ஆதரவையும் அபிமானத்தையும் பெற முயற்சிக்கவேண்டும். அதுவே நம் சமூக எழுச்சி.

ஒவ்வொரு ஊரிலும் உள்ள சமூக மக்கள்தான் நம் அபேக்ஷகர்களை உற்சாகப்படுத்தி தேர்தலுக்கு நிற்க ஆதரவு தேடித்தரவேண்டும். சொந்தலாபம் கருதி தேர்தலில் நிற்கிறார்கள் என்ற இழிவான எண்ணத்தை இன்றோடு மறந்து விடுங்கள். நம் ஐந்து வகுப்புகளில் எவர் நின்றாலும் எல்லோரும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தோம் எனக் கருதி யாதொரு வித்தியாசமும் பாராட்டாமல் அன்றைக்கே தேர்தல் நடைபெறும் தினத்தில் ஆண், பெண் இருவரும் தவறாமல் ஓட்டுச்சாவடி சென்று வாக்குகளை பதிவு செய்து அவரை வெற்றி பெறச்செய்ய வேண்டியது நமது கடமை என்பதை மறக்காதீர்கள். இச்சமயம் தவறினால் மறுமுறை நம் சமூகத்திற்கு எவ்வாறு கூட்டுறவு முறையில் கட்டுப்பாடாக தொண்டுபுரிவது ?

இச்சந்தர்ப்பத்தில்தான் பிற சமூகத்தவரும் நம் சமூகத்திடையே இருக்கும் புல்லுருவிகளும் (விபீஷணர்களும்) சேர்ந்து தங்கள் சொந்த நலங்கருதி நம்மிடையே பாகுபாடுகள் ஏற்படுத்தி நம்மை ஏமாற்ற முயற்சிப்பார்கள். அதைக் கண்டு ஏமாறாமல் சமூக நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஒற்றுமையுடன் நடந்து

கொள்ளவேண்டுகிறேன். நம் சமூக அபேக்ஷகர்களை தேர்தலில் நிறுத்திவிட்டால் அத்துடன் நமது கடமை முடிந்துவிட்டது என்பது மட்டுமல்ல. சமூக மக்கள் அனைவரும்—குறிப்பாக இளைஞர்கள் அனைவரும்—உற்சாகத்தோடும் அபேக்ஷகர்களுக்கு பக்கபலமாக இருந்து பிரசாரம் செய்தும், கண்ணியமான முறையில் நடந்தும் பிறரை தூஷிக்காமலும், ஆத்திரப்படாமலும், சமூகப் பிளவு ஏற்படாதவாறு நடந்துகொள்ளவேண்டும். பொருளாதாரத் துறையில் நலிவுற்ற நம் சமூக அபேக்ஷகர்களை மிக சிக்கன முறையில் வெற்றிபெறச் செய்யவேண்டிய முழு பொறுப்புக்களையும் நம் சமூகத்தினர் ஆங்காங்கு ஏற்றுகொள்வதுதான் நம் சமூகத்திற்கு செய்யக் கூடிய சிறந்த தொண்டு. இவ்விதம் ஏற்படுமானால் தமிழ் ஆந்திர மாகாண முனிசிபாலிட்டி அனைத்திலும் நம் சமூக மக்கள் கண்டிப்பாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

சிறந்த கருத்துக்களை நம் சமூக மக்களிடையே பரப்ப வசதி அளித்திருப்பது "விஸ்வகலாநிதி" என்ற சிறந்த நம் சமூகப்பத்திரிகை ஒன்றுதான் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன. அதுவே இத் தமிழ்நாட்டிலும் கடல் கடந்து வசிக்கும் நம் மக்களிடையே உலாவி ஒருவர்க்கொருவர் அறிமுகப்படுத்தியும், சமூக முன்னேற்றத்திற்காககவும், ஒற்றுமைக்காகவும் சீரிய முறையில் தொண்டாற்றிவருவதை நாம் பயன் படுத்திக்கொள்ள வேண்டாமா? இல்லாவிடில் நாம் நம் கடமையினின்று தவறியவர்கள் ஆவோம். அதன் ஆசிரியரோ பரம்பரை பழுத்த சமூகவாதி. இதைவிட வேறு ஆசிரியா நமக்கு எப்பொழுது கிடைத்திருக்கிறார்? ஒவ்வொரு நெருக்கடியான அரசியல் சந்தர்ப்பத்திலும், சமூக மக்களை விழிப்புறச் செய்திருக்கிறார். அவர் தன் கடமையினின்றும் ஒரு பொழுதும் பின்வாங்குவதில்லை. அதன் பயனாகத்தான் சமூக மக்கள் சார்பாக "தலைவர்" என்ற முறையில் சட்டசபை மெம்பர் ஸ்தானத்தை வகிக்கிறார். இத் தேர்தல் காலத்திலும் அவர் சமூக சங்க நாதத்தை "விஸ்னகலா நிதி" ஒலி பரப்புவாராக. சமூக மக்கள் இப்பத்திரிகைக்கு பெருமித ஆதரவு கொடுக்க வேண்டுகிறேன்.

தோழர்களே! தேர்தல்போராட்டதினம் மிக விரைவில் நெருங்குகிறது. அதில் நம் பங்கை தியாகம் செய்யவேண்டாமா? தியாகத்தினால் நாம் எதையும் சாதிக்க முடியும். என்பதை மறைந்த மகான் காந்தி அடிகள் காட்டியிருக்கிறார். மறவாதீர், செப்டம்பர் மாதத்தை.

குறிப்பு.—நமது கலாநிதி மாட்டு நம்மனோர் நாணயமாக, நாமம் சாற்றாமல் நடந்து கொண்டால் எல்லா நற்பயனையும் அடைவார்களென்பது உறுதி.

ச. ஆ.

மே-ஜூன் மாதத்திய விஸ்வகலாநிதி 15ம் பக்கத்தின் தொடர்ச்சி

மேல் சட்டசபை அங்கத்தினர் பிரம்மஸ்ரீ T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார் ஜூலை மீ 31வ சட்டசபையின் பட்ஜட் விவாதத்தில் நிகழ்த்திய விரிவுரையின் மொழி பெயர்ப்பு.

அவைத் தலைவர் அவர்களே!

மராமத்து இலாக்காவை விடுத்து இனி கைத்தொழில் இலாக்காவைக் குறித்துப் பேசுவேன். நான் பிறப்பினாலே ஒரு கைத்தொழில் வல்லோன். இந்நாட்டுப் பூர்வீக கைத்தொழில் வல்லோர் பகுதியின் முக்கிய தலைவனுமாவேன். எனவே, நாட்டுக் கைத்தொழில்களைப் பற்றி பொதுவாகவும், குடிசைத்தொழில்களைப்பற்றி குறிப்பாகவும் பேச விழைகின்றேன். குடிசைத் தொழில், அதன் அபிவிருத்தித்திட்டங்கள் ஆகியவை, 1917-ம்ஆண்டு தொட்டு இந்த மாகாணத்தில் செவிடுபட முழங்கிவருகின்றன. அவ்வருடம் சென்னையில் முகாமிட்ட இந்திய கைத்தொழில் அபிவிருத்தி கமிஷன் இந்நாட்டுக்கைத்தொழில்களைப்பற்றியும், அவைகளின் அபிவிருத்தியைக் குறித்தும், தொழிலாளர்களிடமிருந்து சாட்சியம் பெற்றதுடன், விரிவான சர்ச்சையும் செய்தது. அக்கமிஷன் முன்னிலையில் சாட்சியம் கூற நானும் அழைக்கப்பட்டேன். அக்கமிஷன் விசாரணையின்பயனாக இம் மாகாணத்திலுள்ள அரசியல் கைத்தொழில் இலாக்காவிரிவடைந்தது. 1937-ம் ஆண்டு காங்கிரஸ் மீளவும் பதவியேற்றபோது இப்பொழுது முதன் மந்திரியான கனம் C. இராஜகோபாலாச்சாரியார், குடிசைத் தொழில்களை எப்படி விருத்திசெய்யலாமெனும் வழிவகைகளைக் குறித்து ஒரு திட்டம் வகுத்துத்தர என்னைப் பணித்தனர். அவ்வாறே நூறுபக்கங்கள் கொண்ட ஒரு புத்தகத்தை—"இந்திய கைத்தொழில் அபிவிருத்தி' யெனப் பெயர் புனைந்து சர்க்காருக்கு சமர்ப்பித்தேன்.

அப்புத்தகத்தில் பல நூதன, அபூர்வமான தொழில்களை விரிவஞ்சாது கூறி, அவைகளைச் செய்வதற்கேற்ற இடங்களையும் செப்பியுள்ளேன். அதில் மூன்று வருடத் திட்டமொன்றையும் வகுத்திருக்கிறேன். அப்புத்தகம் அரசியலாரால் கவனிக்கப்படுமென்று அக்காலத்தில் உறுதி கூறப்பட்டது. ஆனால் இப்பொழுது அது சூரிய வெளிச்சத்தைக் காணாது. அரசியலகத்தில்எங்கோமறைந்துகிடைக்கின்றது. இதைவிட வருந்தக்கூடிய விஷயம் வேறு என்னவேண்டும்?

குடிசைத்தொழில் அபிவிருத்தி திட்டம் இப்பொழுது ரூரல் வெல்பேர் (Rural Welfare) இலாக்கா என்று சொல்லப்படுகிற பிர்க்கா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வருகின்றது. இத்திட்டம் முதன்முதல் 1946 வருடத்தில் தோன்றியது.

இப்பொழுது மேலும் விரிவடைந்துள்ள அத்திட்டம் 1950ம் வருடம் தொட்டு அமுலில் இருந்து வருகின்றது. எந்த ஜில்லா எவ்வளவு பெரிதாயினும் அதில் மூன்று பிர்க்காகளுக்கு மேலில்லை. ஆயினும் 1952 ஆண்டில் இரண்டு அதிகப்படி பிர்க்காக்கள்சேர்க்கப்பட்டிருக்கின்றனவாம். சாதாரணமாக ஒவ்வொரு பிர்க்காவும் 35 கிராமங்களைக்கொண்டதாகும். இவைகள் ஏழு அங்கத்தினர்களைக்கொண்டபிர்க்கா அபிவிருத்தி சங்கத்தாரால் (Board) சமாளிக்கப்பட்டு வருகின்றன. இந்த போர்டாரின் வேலைத்திட்டங்களில் முக்கிய அம்சமாவது, அந்தந்த கிராமங்களுக்கேற்றகுடிசைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதாகும். இதற்கென ஒவ்வொரு பிர்க்காவிற்கும் வருடந்தோறும் ரூ. 50,000 மானியமாகவிடப்பட்டிருக்கிறது. ஆனால், குடிசைத் தொழிலபிவிருத்திக்கு ஒரு சிறு பகுதியேனும் மேற்குறித்தபோர்டார்செலவிடுவதில்லை முழுமானியமும் ரஸ்தா போடுதல், கிணறுதோண்டுதல்ஆகியவைகளில்

செலவிடப்படுகின்றது. இவ்வேலைகள் 5 அல்லது 8 கிராம அதிகாரிகளால் கண்காணிக்கப் படுகின்றன. ஜில்லா விவசாய இலாக்கா உத்தியோகஸ்தர்கள் விவசாய விஷயங்களை கவனிக்கிறார்கள், கைத்தொழில் இலாக்கா தலைவர் குடிசைத்தொழிலாளர்களுக்குத்தேவையான ஆயுதங்களை கொடுத்துதவக் கடமைப்பட்டவராவார். ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள கிராமக் கைத்தொழிலாளர்க்கு இலவசமாக ஆயுதங்களை வழங்குவதற்கு ரூ. 25000 மானியம்ஒதுக்கப்பட்டிருப்பதுஉண்மையே மேலும் குடிசைத் தொழில் சட்டம் (Act) தொழிலாளருக்கு ரூ500க்குமேற்படாத்கடன்தொகையைக் கொடுக்கலாமென அனுமதிக்கின்றது. ஆனால் இவ்வித கடன்கள் 1947-ம் ஆண்டுதொண்டு ஒரு தொழிலாளிக்கும் கொடுக்கப்படவில்லையென சந்தேகமற அறிகின்றேன். நூற்றுக்கணக்கான கடன் விண்ணப்பங்கள் இன்று வரையில் அரசியலாரால் கவனிக்கப்படாமல் சர்க்கார் அலுவலகத்தில் தூரங்கிக் கிடக்கின்றன!

மேலும் குடிசைத் தொழிலாளருக்குக் கொடுக்கப்படும். மூலப்பொருள்கள் மிகக் கொஞ்சமேயாகும். நமது மகாணத்துக்கு மத்திய சர்க்காரால் ஜூலை மாதம்முதல் செப்டம்பர்வரையில் மூன்றுமாதங்களுக்கு 10000 டன் இரும்பு பங்கிடு செய்யப்பட்டுள்ளது. இதில் சுமார் 9000 டன் இரும்பு, விவசாய இலாக்காவுக்கும், வீடுகட்டுவதற்கும் சேமிக்கபபட்டிருக்கிறது. ஆனால் குடிசைத்தொழில்களுக்கு சுமார் 250 டன் இரும்பு சற்றேறக் குறைய ஒரு லட்சம இரும்பு வேலைக்காரர்களுக்கு பகிர்ந்தும், பற்றாககுறையாகவும் கொடுக்க அரசியலார் திட்டமிட்டிருக்கின்றனர். இதனால்இரும்புத் தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டிய இரும்பை கள்ளமார்க்கட்டில் அதிகவிலைகொடுத்து வாங்கி வேலை செய்தும் கூலி கட்டாமல் பட்டினி கிடக்க நேரிடுகின்றது.

பரீட்சார்த்தமாக இரும்பு பங்கிட்டை 250டன்களிலிருந்து இம்மூன்று மாதத்திற்கு 500டன்களாக உயர்த்திப் பார்ப்பது நன்று. பிர்க்காக்களில் உள்ள ரூவாப்பரேடிவ் சங்கங்கள் மூலம் இரும்பையும, மரம், பித்தளை முதலிய உலொகங்களையும், தொழிலுக்குவெண்டிய இதர சாமான்களையும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யலாம், ரெக்க விலைக்கு வாங்க இயலாத தொழிலாளர்களுக்கு கடனாக குறிப்பிட்ட அளவுக்கு தளவாடங்களைக் கொடுத்து சாமான்கள் தீர்வு பெற்று விற்பனை செய்யப் பட்டபின் கடனை ரெக்கபாகத் திருப்பி பெற்றுக் கொள்ளலாம் அல்லது தீர்ந்தசாமான்களைக்கடன்தொகைக்கேற்ப ஈடு செய்து கொள்ளலாம். இரும்பு, மரம், உலோகம் முதலிய தளவாடங்கள் 'பர்மிட்' கொடுக்கப் பெற்றிருக்கும் மொத்த வியாபாரிகளிடமிருந்தும், அரசியல் கைத் தொழில் இலாக்கா மூலமாகவும், மிக நிர்ப்பந்தங்களுடன் தொழிலாள்ர்கள் பெற வெண்டியவர்களாக இருக்கிறார்கள் கிரமத் தொழிலாளர்கள், பர்மிட் பெற்றவர்களிடம் நகரங்களுக்கு வருவதென்றால் மிகக் கஷ்டத்தையும், பண நஷ்டத்தையும் அடைத்து வருகிறார்கள். இந்த முறை அனுஷ்டானத்தில் உள்ளவரை குடிசைத் தொழில்களும், தொழிலாளர்களும் தலையெடுக்க மார்க்கமில்லை. இதனோடும், பருவகால வேலைக்காரர்களான பொன் தொழிலாளர்களை ஷாப் சட்டத்தின் கீழ் கொடுமையாக நடத்து படுவது மிகத்தகாத காரியமாகும். இதைக் குறித்து வந்துள்ள ஆட்சேபனைகள் மலைபோல் குவிந்துள்ளன. இவைகளுக்கு பரிகாரம் அரசியலாரால் செய்யப்படாவிடில் இதற்கென ஒரு தனிமசோதாவை, நாட்டு அற்புத பொன் தொழில் க்ஷீணிக்கா வண்ணம் விரைவில் கொண்டுவர எண்ணியுள்ளேன்.

இலங்கை சர்க்காரில், கைத்தொழில இலாக்காவும், கூட்டுறவுச் சங்க இலாக்காவும், கடன் கொடுப்பதிலும், தளவாடங்கள் கொடுத்துதவுவதிலும் ஒருமித்து வேலை செய்கின்றன. உலகத்துக்கே வழிகாட்டியாக இலங்கை சர்க்கார் கைத்தொழிலபிவிருத்திச் சங்கத்தை ஏராளமாகஏற்படுத்தியிருப்பதுடன் பொன். வெள்ளித் தொழில்களை அபிவிருத்தி செய்யவும் தலைப்பட்டிருக்கின்றார்கள். சர்க்கார் பர்மிட் பெற்ற பொன் தொழிலாளருக்கு மூன்று மாதத்திற் கொரு முறை 3 முதல் 300 அவுன்ஸ் தங்கத்தை கொள் முதல் விலைக்குக் கொடுத்து ஆபாரணமாகச் செய்து அதிக விலைக்கு விற்கவும் அனுமதித் துள்ளார்கள்.

இவ்வித வசதிகள் அந் நாட்டில் மலிந்துகிடக்க இந் நாட்டில் அவைகள் பஞ்சமாக இருக்கின்றன. குடிசைத் தொழிலபிவிருத்தி இலாக்கா மந்திரி,உத்தியோகப் பற்றில்லாத ஒரு பரிசீலனைக் கோஷ்டியை விரைவில் இலங்கைக்கு அனுப்பி அந் நாட்டு கைத்தொழில் நிலைமையை நேரில் கண்டறிந்து நமது அரசியலாருககு அறிவிக்க ஏற்பாடு செய்வது அவசியமெனக் கருது கின்றேன்.

நாம் இந் நாட்டில். நமது முன்னோர்கள் செய்து வைத்துள்ள கூடகோபுரங்களையும் மாடமாளிகைகளையும் கண்டு களித்து இறுமாந்துள்ளோம். அவைகள் வருங்கால சந்ததியார்களுக்கும், அந்நிய நாட்டார்களுக்கும் அறிவுச் சுடர் கொளுத்திவனவாய்ஆகாய மாளவி நிற்கின்றன. அவ்வித பேராற்றல் பெற்ற சிற்பிகளின் தொகை அருகிவிட்டது. ஆனால், இவ்வுண்மை நமது அரசியலார் அறிந்திருந்து, நமது மூதாதையர்களின் பெருமையை நிலை நாட்ட கோபுரத்தை அரசியல் முத்திரையில் பொறித்து நமது சந்ததியாரைப் பெருமைப் படுத்தி இருப்பது மகிழ்ச்சிக் குரிய விஷயமாகும். இந்திய சிற்ப வளர்ச்சிக்கு பொது மக்களின் ஆதரவும், அரசியலாரின் தீவிர உதவியும் வேண்டப் படுவனவாம்.

1944ம் ஆண்டில் சென்னை அறநிலைய பாதுகாப்பு இலாக்கா தலைவர் சிற்பத்தொழிலையும், கோவில் கட்டுதல், விக்கிரகம் பிரதிமைநிர்மாணம் ஆகியகலைகளை எப்படி அபிவிருத்தி செய்யலாமென ஒரு திட்டத்தை வகுத்துத்தர என்னைக் கேட்டிருந்தார்கள். அதுபோலவே ஒரு திட்டம் வகுத்து அதில் ஒரு சிற்ப பாடசாலையையும் நடத்தும் மார்க்கத்தையும் செப்பியுள்ளேன். அதன் கதி பின்னர் என்னவாயிற்றென்பதை அறிகிலேன்.

இப்பொழுது அறநிலை பாதுகாப்பு மந்திரியாரை, தற்பொழுது மறைந்து கிடக்கும் நாட்டுச் சிற்பிகளைக் கை தூக்கிவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஒரு தகுதி வாய்ந்த சிற்பியைத் தேர்ந்தெடுத்து. மற்ற ஆஸ்தான வித்வான்களைப்போல் ஆஸ்தான சிற்பியாக அமர்த்துவதில் அக்கறை காட்டுவாரென நம்புகிறேன். சித்திரடு

படமெழுதுதல், பிரதிமை செய்தல் ஆகிய அற்புத வித்தைகளை விர்த்தி செய்வதோடும், சென்னை சிற்பவித்தியாசாலை பாடங்களையும் சீர்திருத்தம் செய்வது அத்தியாவசியமாகும். தென்னாட்டு பெயிண்டிங் என்னும் சாயந்தீட்டும் சித்திரக்கலை அபிவிருத்தியடைவதற்குச் சாதகமாக ஒரு சித்திர மண்டலத்தை சென்னையில் நிறுவுதல் நலமாகும். கூடுமானால் எல்லா பெரிய பட்டிணங்களிலும் சித்திரக்காட்சிச் சாலைகளை அமைப்பது நன்று.

சென்னை அரசியலார் விளம்பா முறையில் ஒரு மாத இதழை நடத்தி வருகிறார்கள். இதைப் பார்க்கக் கண்கள் கூசுகின்றன. பழைய செய்திகளே இதில் வெளிவருகின்றன. இதை மாற்றி அமைப்பதுடன் அமெரிக்கா, மைசூர் சர்க்கார் ஜர்னல்களைப் போல் அழகிய படங்களுடன் வெளியிடுவது மிக அவசியமாகும். சென்னை சர்க்கார் உத்தியோகஸ்தர்களே அப்பத்திரிகையை நடத்தி வருவதற்கு பதிலாக நல்ல, யூகமிகுந்த எழுத்தாளர்களை ஆசிரியர்களாக அமர்த்தி நடத்துவது உசிதமாகும்.

இச்சபையில் கனம் மெம்பர் ஒருவர், கவர்னரால தேர்வு பெற்ற மெம்பர்கள் நடந்து கொள்ளவேண்டிய விதத்தை போதிக்க முன் வந்தார். ஆயினும், இது விரும்பத்தகாத, வேண்டப்படாத போதனையாகும் ஏனெனில் தேர்வுபெற்றிருக்கும் அங்கத்தினர்கள் மிக்க அனுபவம் பெற்றவர்கள்; தங்கள் கடமைகளை நன்குணர்ந்தவர்கள்; பல கலைகளில் தேர்ந்தவர்கள். எனவே, அவருடைய போதனையில்லாமலே அங்கத்தினர்கள் நன்கு நடந்துகொள்ளவியலும் என்பதை வலியுறுத்துகிறேன்.

நமது முதன் மந்திரி கனம் இராஜாஜி அவர்கள் கடவுளைப் பற்றி பேசுவதையும், போதிப்பதையும், இச்சபையிலும் சிலர் கடிந்து பேசினார்கள். இந்நாள் நாகரிகம் இரும்பு இயந்திரங்கள், அணுகுண்டுகளினிடையில், ஒப்பாகவோ, தப்பாகவோ சென்று கொண்டிருக்கின்றது. மனிதன் தனது விஞ்ஞான அறிவைக் கண்டு தானே மகிழ்கின்றான். எல்லாம் விதிவழியென மதித்து வாழ்கின்றான். இந்நாள் உலகில் நிகழும் அநீத வாழ்வுக்கும், அரசியலில் தகாதன நிகழ்வதற்கும், நாம் நமது உள்ளத்தைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்ளாததும், அதற்கு பயந்து நடவாமையுமே முக்கிய காரணங்களாகும். இயற்கை செயற்கையாகிவைகளுக்கெல்லாம் அடிப்படையானதும், மனோவாக்கு காயங்களுக்கு அதீதமான ஒரு உன்னத வஸ்து உள்ளதென்பதை மறந்தேவிடுகிறோம். இத்தகைய படுமோசமான காலத்தில் கடவுளை நினைப்பூட்டும் சற்போதனைகள் மிக அவசியமாகும். அதற்கு ஏற்றவரும், தகுதிவாய்ந்தவரும் முதன் மந்திரியார் கனம் இராஜாஜி அவர்களென்பதில சிறிதும் ஐயமல்லை.

கனம் அக்கிராசனர் அவர்களே! வந்தனத்துடன் என்பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

(முற்றிற்று)

சென்னை மேல்சட்ட சபையில் கேள்விகள்.

பிரம்மஸ்ரீ குலோத்தாரக T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார், 1952 அக்டோபர்மீ கூடும் சட்டசபைக்கு அனுப்பியிருக்கும் கேள்விகளாவன:

I. மராமத்து இலாகா கனம் மந்திரியார் தயை புரிந்து கீழ்க் கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா?

(a) தென்னிந்தியாவுக்கு பிரயோசனப்படும் நீர்ப்பாசன திட்டங்கள் யாவை?

(b) அவைகளின் பிரதமக் கால்வாய்களின் நீளம் எத்தனை மைல்?

(c) இதுவரையில் அக்கால்வாய்கள் எத்தனை மைல் தூரம் வெட்டப்பட்டுள்ளன?

II. கைத்தொழில் இலாகா மந்திரியார் தயையுடன் கீழ்க் கண்ட கேள்விகளுக்கு பதில் கொடுப்பாரா?

(a) அடுத்த மூன்று மாதங்களுக்கு இந்த மகாணத்திற்கு சென்டரல் கவர்ன்மெண்டரால் எவ்வளவுடன் இரும்பு ஒதுக்கப் பட்டிருக்கிறது?

(b) குடிசைத் தொழிலபிவிருத்தித் திட்டம் பயன்படுமாறு 500டன் இரும்பு மாகாண சர்க்காரால் வினியோகிப் பதைக் குறித்து கவனிக்கப்படுமா?

(c) அரசியலாரால், ஆக்டின்படி குடிசைத் தொழிலாளருக்குக் கொடுக்கப் படவேண்டிய கடன் தொகை ரூ. 500 எப்பொழுது அமுலுக்கு கொண்டு வரப் படும்?

(d) தெருத் திண்ணையில் பட்டறை வைத்துக்கொண்டு கல்யாண காலங்களிலும், தினசரியும் வேலை செய்து, கடுமையான ஷாப் போட்டிகளுக் கிடையே, பிழைத்து வரும் நாட்டுப் பொன், வெள்ளித், தொழிலாளர்களை ஷாப் சட்ட நிர்ப்பந்தங்களிலிருந்து அரசியலார் விலக்குச் செய்வார்களா?

(e) இதைக் குறித்து அரசியலாருக்கு இத்தொழிலாளர் பல ஊர்களிலிருந்தும் குறிப்பாக மதுரை பொன், வெள்ளித் தொழிலாளர் சங்கத்திலிருந்தும் வேண்டுகோள்களும் தூதுகோஷ்டிகளும் வந்திருக்கின்றனவா?

III. ரூரல் வெல்போர் இலாக்கா வென்று சொல்லப்படும் கிராமப் புனருத்தாரண இலாக்கா மந்திரியார் தயை செய்து கீழ்க் கண்டவைகளுக்கு பதிலளிப்பாராக.

(a) பிர்க்கா அபிவிருத்தி போர்டின் கடமைகளில் ஒன்று குடிசைத்தொழிலபிவிருத்தியென்று குறிப்பிடப்பட்டிருப்பதால், அந்த போர்டாருக்கு அரசியலார் அளிக்கும் வருட மானியத்திலிருந்து அதற்குப் பண உதவி புரிகின்றார்களா?

(b) ஜில்லா வாரியாகவும், பிர்க்கா வாரியாகவும் பார்த்தவுடன் புரிந்து, கொள்ளக் கூடிய 'இண்டெக்ஸ் மாப்' என்னும் விளக்க படங்களை அரசியலார் அவசியமென உணர்ந்து தயாரிப்பார்களா?

IV. ஸ்தல ஸ்தபான இலாககா கனம் மந்திரியார் கீழ்க் கண்ட கேள்விகளுக்கு பதில் தயை செய்வாரா

(ஆ) ஸ்தல ஸ்தாபனங்களில் இரண்டொரு ஸ்தானங்களை, பார்லிமென்டிலும், மாகாண சட்ட சபைகளிலும் ஒதுக்கி வைத்திருப்பது போல், கலைகள், சிற்சித்திரம், கூட்டுறவுச் சங்கம் ஆகியவைகளில் தேர்ந்தவர்களை நாமினேஷன் மூலம் தேர்ந்தெடுக்குமாறு சென்னை, இதர ஜில்லா முனிசிபல் ஆக்ட்களை திருத்தம் செய்வதைக் குறித்து ஆலோசிப்பாரா?

V. எண்டோமெண்டு எனும் அறநிலயப் பாதுகாப்பு மந்திரியார் கீழ்க்கண்ட கேள்விகளுக்கு தயை செய்து பதிலளிப்பாரா?

(a) கோபுரத்தை அரசாங்க முத்திரையாகக் கொண்டு பெருமை பாராட்டும் அரசியலார், இதர ஆஸ்தான வித்வான்களை யொத்து ஒரு "ஆஸ்தான சிற்பி"யை நியமிக்க முயற்சி எடுத்துக் கொள்வார்களா?

(e) நாட்டின் பெருமைக்கு அடிப்படையான சிற்பக்கலை மறைந்து விடுவதை உத்தேசித்து பெரிய தேவஸ்தான சார்பிலும், செலவிலும், கோவில், கட்டிட பிரதிமை நிர்மாண வேலைகளை போதிக்கும் பாடசாலைகளை இரண்டொரு இடங்களில் ஏற்படுத்த முயற்சி செய்யப்படுமா?

தென்னிந்திய விஸ்வகர்ம மத்திய மகா சங்கம்

ரிஜிஸ்டர் No. S. 66/50

வேண்டுகோள்

கடந்த 40 ஆண்டுகளாக சமூகப் பணியைச் சோர்வில்லாது ஆற்றியும், விஸ்வகுல மக்களுக்கு சமூகத் தந்தையாக விளங்கிவரும், பிரம்மஸ்ரீ. குலோத்தாரக, T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார், F. R. S. A (லண்டன்) அவர்களை சென்னை கவர்னர், நமது கைத்தொழில் வகுப்பின் பிரதிநிதியாக, மேல் சட்டசபைக்கு M. L. C. பட்டம் தந்து தேர்ந்தெடுத்திருப்பதை சமூக மக்களும், கிளைச் சங்கங்களும் நன்கறிவார்கள்.

அவரது அரிய சேவைகளைப் பாராட்டி மத்திய மகா சங்கத்தின் சார்பாகவும், நமது 25 லட்சம் மக்களின சார்பாகவும், 1952ஆம் அக்டோபர் மாதம் 25ல் ஒரு மாபெருங் கூட்டம் சென்னையில் கூடி, வெள்ளிப் பேழையில். ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நன்றியோடு நமது சமூக மக்கள் நடந்துகொள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை நன்கு பயன் படுத்திக் கொள்வார்களெனக் கோரப்படுகிறது.

வர இயலாத வெளியூர் பிரமுகர்களும், சங்கங்களும், தங்களாலான பொருள் உதவி செய்வதுடன், தங்கள் தங்கள் அச்சிட்ட உயர் உபசார வாழ்த்து பத்திரங்களையும் அக்டோபர் மாதம் 15உக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி நமது மத்திய சங்கத்தையும், குலோத்தாரகரையும் கௌரவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மீட்டிங் கூடும் இடம் பின்னர் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

இங்ஙனம்,

T. M. முத்துசுவாமி ஆச்சாரியார், M. A. L. T.

பிரசிடெண்டு,

A. முத்துகிருஷ்ண ஆச்சாரியார்

பொதுக் காரியதரிசி

விலாசம்

19. வெங்கட்டராமய்யர் தெரு.

தியாகராயநகர் சென்னை.

ஸ்ரீ நடராஜர் ஆலயப்பணி, சிதம்பரம் விஸ்வகர்ம சமூகத்துக்குக் கிடைத்துள்ள பெரும்பேறு.

நமது மகா நாடுகளுக்கு இருமுறை விஜயம் செய்த இலங்கைப் பிரமுகரும், 19 விஸ்வகர்ம மகா நாடுகளைக் கூட்டி சமூக மக்கள் முன்னேற்றத்துக்கு அரும்பாடு பட்டு வரும், பிரம்மஸ்ரீ V. S. கந்தையா அவர்கள், தெரிசனார்த்தமாக சிதம்பரம் சென்றிருந்தகாலை, ஆங்கு தில்லைவாழ் அந்தணப் பிரமுகர்களைக் கண்டு உரையாடி அவர்கள் நட்பையும் அநுதாபத்தையும் பெற்று குன்றாப் புகழ் அடைந்துள்ளார் என்பதை மிக மகிழ்ச்சியுடன் மலேய, இலங்கை. இந்திய வாழ் விஸ்வகர்மர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம். அவர் ஸ்ரீ சிதம்பர அதிகாரிகளுடன் நடத்திய, நடத்திவரும் பேச்சுக்கள், எழுத்துக்கள் மூலமாக கீழ்க்கண்ட சுதந்தரங்களை, நம்மனோர் சுபிட்சத்தைக் கருதி பெற்றிருக்கிறார். அதற்குப் பண வசதி உடனே செய்து கொள்ளவும், கீழ்க்கண்ட திருப்பணிகளை இம் மார்கழித் திங்கள். ஆருத்திரா தரிசனத்தை முன்னிட்டு ஆரம்பித்து, நமது சமூகத்தைப் பற்றியிருக்கும் பூர்வசாபத்தைத் தொலைத்து, ஸ்ரீ நடராஜர் திருவருளால் நம்மனோர் எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டுமென்பதே அவரது முக்கிய குறிக்கோளாகும்.

அவர் இட்டிருக்கும் திட்டங்களாவன:

20-12-52, கோவில் திருப்பணி, வாகனம் ஆபரணம் முதலியன புதுப்பிக்க ஆரம்பிக்கல்.

21-12-52. பகல் சிவகங்கை சுத்தமாக்குதல்.

இரவு- சமூக விமோசனம் கருதி பஜனை, சத்காலக்ஷேபம்.

22-12-52. முற்பகல். சமூகத்தினர் அனைவரும் விரதம் அநுஷ்டித்தல். இருதேசத்தினர் பேரிலும் அபிஷேகம் ஆராதனை. பிற்பகல். இரு நாட்டாரின் விசேஷ சமூக கூட்டு மகா நாடு.

இப்பெரிய அருந்தவ முயற்சிக்கு ஏராளமான பொருள் இரு நாட்டாரும் தாராளமாக உதவி, சமூகத்தார் உன்னதப் பெருமை யடைய வேண்டுமென்பது அவரது உள்ளக்கிடக்கையாகும். அத்துடன் நாமும் ஒத்துழைக்கவும் ஆவன புரியவும் முன் வந்திருக்கின்றோம். அன்பர்கள் இது குறித்து தங்கள் யோசனைகளை, வெற்றி பெறும் மார்க்கங்களை கலாநிதியில் எழுதக் கோருகிறோம்.

தலைமை ஆசிரியர்

திருச்சி ஜில்லா சமூகத்தவர்களுக்கு!

நமது திருச்சி ஜில்லா சபையைப் புனருத்தாரணம் செய்ய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறன. ஆகவே நமது ஜில்லாவின் தாலுகாக்களில் உள்ள எல்லா சமூக கிராம கிளைச் சங்கங்களும் ஷை ஜில்லா சபையில் இணைந்து கொள்ளவேண்டியதவசியம். ஆதலால் சங்கங்களும், கிளைச்சங்கங்களில்லாத ஊர்களில் உடனே கூட்டியும் ஷை ஜில்லா சபையில் இணைய தீர்மானித்து உடனே தபால் எழுதவும். அக்டோபர் இறுதியில் பெரியார் தெய்வசிகாமணி ஆச்சாரியார் M.L.C. அவர்களைக்கொண்டு ஜில்லா சபை திறப்பு விழா செய்யப்படும். ஆகவே கிளைச் சங்கங்களும், சமூகத்தவர்களும் உடனே திருச்சியில் உள்ள திருசொக்கலிங்க ஆச்சாரி, ஜெயலட்சுமி ஒர்க்ஷாப் மணிவரை ரோடு, திருச்சி விலாசத்துக்கு எழுத வேண்டுகிறேன்.

அமைச்சர்

குழித்தலை பிச்சமூர்த்தி

பெங்களூர் விஸ்வப் பிராம்மண மகா சபையின் முறை தவறிய நடவடிக்கை.

சில ஆட்சேபனைக்குரிய தகவல்களைத் தரும் கடிதங்கள்.

தெ.இ. மகாசங்கம் சென்னை. சென்ற விஸ்வகலாநிதி பத்திரிகை 17ம் பக்கத்தில், மத்திய மகாசங்கத்தின் நடவடிக்கைகளைக் குறித்து, மேற் குறித்த பெங்களூர் கிளைச்சபை, ஆட்சேபனைக்குரிய வாறு நடந்துகொண்டிருப்பதைச்சுட்டிக் காட்டி இதர சங்கங்களுக்கும் எச்சரிக்கை செய்திருக்கிறோம். இச்சங்கத்தின் முறையற்ற நடவடிக்கைக்கு தக்க சமாதானம் கூறக்கேட்டிருந்தபடி கொடுக்கத் தவறியதுடன் தம்மை ஒரு பெரிய அறிவாளியெனக் கருதி நொண்டிச்சமாதானம்கூற அச்சங்ககாரியதரிசி முற்பட்டுள்ளார். 1952ஸ்ரீ ஜுன் மீ 21உ கூட்டி தீர்மானித்தாகச் சொல்லப்படும் பொதுக்கூட்டத்தைக்குறித்து கீழ்க்கண்டவாறு நான்கு கடிதங்கள் பெங்களூர் பிரமுகர்களிடமிருந்து கிடைத்துள்ளன. அவைகள் அந்தரங்க கடிதங்களாக பாவிக்கப்படவேண்டியவை. முதல் கடிதம்: மத்திய மகாசங்கத்தில் பொறுப்புள்ள உத்தியோகஸ்தரிடமிருந்துவந்தகடிதத்தில், ஜுன் மீ 21உ பொதுக்கூட்டம்முன் அறிவிப்பு நோட்டீஸ் மூலமாகவோ, தண்டோரா மூலமாக அறிவிக்கப்படவில்லையென்றும் அச்சங்கத்தின் முக்கிய அங்கத்தினராக இருந்தும் தமக்கு அறிவிக்கப்படவில்லையென்றும், பெங்களூர் சிட்டியிலுள்ள விஸ்வகர்மர்கள் எவரும் அறியாரென்றும் தெரிவித்திருப்பதோடும் தாம் விசாரித்தறிந்ததிலிருந்து அவ்வித பொதுக்கூட்டம் ஒன்று நடக்கவில்லையென்றும் ஆனால், புதுக்காரியதரிசியாக நியமனம்பெறற்குக்கும் ஒருஇளைஞரின் திரிசமத்தால், அயமீட்டிங் நடந்தது போல் புரொசீடிங்ஸ் புத்தகத்தில் எழுதிக் கொண்டு வீடு வீடாகச் சென்று கையெழுத்து வாங்கப்பட்டதாகவும், அன்றுபோது மீட்டிங்கில் ஆஜரான மக்களின் கையெழுத்திட்ட ஜாப்தா இல்லையென்றும் எழுதியுள்ளார்.

இரண்டாவதாக, எழுதியுள்ள சமூகப் பிரமுகர், இச்சங்கத்துக்கு புதுககாரிய தரிசியாக, வந்திருக்கும புதியவர்பழைய காரியதரிசியார் மீது புகார் கற்பித்து தாம் அந்தப் பதவியை சூழ்ச்சியால் அடைந்து அவர் இட்டதே சட்டமாக அச்சங்கம் நடந்து வருவதாகக்கூறுகிறார்.

மூன்றாவது கனவான் எழுதியுள்ள கடிதத்தில இச்சங்க காரியதரிசி வெளியூர் வாசியென்றும், பெங்களூர் வந்தவரென்றும் சர்வோதயா ... பணிக்கு ... தேவாம்சாத்துக்கொண்டதால் கமிஷன

கிடைக்குமென்று ஆசைப்பட்டு, அது பற்றிய தீர்மானத்தை தமது பேரிலேயே போட்டுக்கொண்டிருப்பதிலிருந்து வெளிப்படையாக விளங்குமென்றும் கூறுகிறார்.

நாணயமிக்க நமது மற்றொரு நண்பர் இந்த அச்சு நோட்டிசைக் கண்டு திடுக்கிட்டுப் போனதாகவும், பெங்களூர் சபையின் எந்ததீர்மானமும் இதுவரையில் அச்சிடப்பட்டதில்லையென்றும், இதை மட்டும் அச்சிட்டு மத்திய மகா சங்கத்துக்குமேற்பட்டசங்கமாகஎண்ணி வெளியூர்களுக்குபகிரங்கப்படுத்தஎன்ன அவசியம் ஏற்பட்டதென்று கேட்பதோடும், ஸ்ரீ பாகவதரிடமிருந்து கைக்கூலிக்கோ, தூண்டுதலுக்கோ உடன்பட்டு செய்த காரியம் இது வென்று கடிந்து கூறுவதுடன் அதற்கு தக்கபடி சட்ட நடவடிக்கை, ஒழுங்கு நடவடிக்கை மத்திய சங்கம் எடுக்கவேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்.

எனவே, மத்திய மகாசபையின் அடுத்த காரிய நிர்வாகக்கமிட்டி மீட்டிங் முன்னிலையில் இக்கடிதங்களைவைத்து ஆவனசெய்யுமாறு கேட்டுக்கொள்வது எமது கடமையாகிறது. மேலும் ஒரு நபர் செய்த தகாத குற்றத்திற்காக, பல காலம் நம்முடன் கூடி குலக்காரியங்களில் ஒத்துழைத்து வரும் பல குலாபிமான மிக்க நண்பர்களின் மனம் புண்படாதவாறு காரியக் கமிட்டியார் இது விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டுமாய் பணிவுடன்கேட்டுக்கொள்கிறோம். நான்கு கடிதங்களும் உண்மையாயின், காரியதரிசியின் அகம்பாவமான, சட்ட விரோதமான செய்கையைக் கவனித்து மேற்படி சங்கத்தார் அவர்மீது தக்க நடவடிக்கைகள் தாங்களே எடுத்துக் கொள்வார்களெனக் கருதப் படுகிறது.

T. M. தேய்வசிகாமணி ஆச்சாரியார்
நிர்வாக ஆலோசகர்

இந்த தொழிற்சாலையில்பொன் வெள்ளி, ரத்தினங்களாலாகிய சகல வேலைகளும், உயர்ந்த வேலைப் பாட்டுடன், குறைந்த கூலியிலும், குறித்த காலத்திலும் செய்துதரப் படும். ரெடிமேட், ஆபரணங்களும் கிடைக்கும். வேண்டுவோர் ஒரு முறை பரீட்சிக்கலாம். பொன், வெள்ளி பரிசுத்தத்திற்கு உத்திரவாதம் அளிக்கப்படும். இந்த கம்பெனிக்கு சென்னைகம்பெனிகளாலும், ஆதரிக்கபட்டு, ஆர்டர்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

K. A. தேய்வசிகாமணி ஆச்சாரியார்,
ராஜவீதி, வாலாஜபாத், புரொப்ரைட்டர்.

மதுரை விஸ்வகர்ம ஐக்கிய க்ஷேம நிதி சங்கம்.

முதலாவதாண்டு நிறைவிழா

மேற்படி சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவிழா 7-9-52ந் தேதி காலை 9 மணிக்கு மதுரை காளியம்மன் கோவிலில் திரு. டி. எஸ். பொன்னையா ஆச்சாரியார் தலைமையில் நடைபெற்றது

நடிகர் திரு. கே. என். தனபாலன்

இறைவணக்கத்துக்குப்பின், மதுரை முனிசிபல் கவுன்சிலர் திரு. எஸ். கே. முத்துக்கனி தேசீயக்கொடி ஏற்றுவித்தார்.

தலைவரவர்களுக்கு மதுரை திரு. இ. எஸ். தியாகராஜன் வரவேற்பு இதழ் வாசித்தும் சங்கத்தலைவர் திரு. தி. பேச்சி முத்தாச்சாரி, ஆண்டு அறிக்கை வாசித்தும் பின், திரு. என். செல்லையா ஆச்சாரியார், சமூகக் கட்டுப் பாட்டினால் தான் விஸ்வகர்ம சமூகம் முன்னேற முடியுமென்றும் கூறினார்.

"இளைஞர் கடமை", எனும்பொருள் பற்றி திரு. பி. தனுஷ்கோடி பேசுகையில் விஸ்வகர்ம சமுதாயம் முன்னேற இளைஞர்கள் திரண்டு முன்வரவேண்டுமென்றார்.

அட்வகேட் திரு. என். கோவிந்தசாமி ஆச்சாரி" சங்கமும் நமது நிலையும்" எனப் பேசுகையில் சங்கங்களால் தான் நாம் முன்னேறலாமென ஊன்றிக் கூறினார். பின்னர் திரு. இ. எஸ். தியாகராஜன் "கல்வியும் தேர்தலும்" என்பவற்றைப்பற்றிபேசுகையில், வரப் போகிற முனிசிபல் நகரசபைத் தேர்தலில் நமது சமூக அபேட்சகர்களையே ஆதரித்து நமது குறைபாடுகளைப் போக்கிக் கொள்ளலாமென மிக விளக்கினார். இதனை ஆதரித்து, திரு. ம. முருகேசன் திரு. தி. ரா. அ. அம்பிகேஸ்வரனும் உணர்ச்சியுடன் பேசினர்.

முனிசிபல் தேர்தல், குடிசைத் தொழிலபிவிருத்தி, குலப் பெரியாரின் மேடைத் தமிழுக்கு அரசாங்கத்தார் பாராட்டு, வோடி. நித்தியானந்த அடிகள் மறைவைக் குறித்த தீர்மானங்கள் நிறைவேறின.

குல நலச் சுவடி மூலமும், உரையும், விளக்கவுரையும்

இந்நூல், போஷகர்களுக்கு இலவசமாகவும், விசேஷ அங்கத்தினர்களுக்கு 3 அணு தபால் தலைகள் பெற்றுக்கொண்டும், சாதாரண அங்கத்தினர்களுக்கு பன்னிரண்டணு தபால் தலைகள் பெற்றுக்கொண்டும், அங்கத்தினர் அல்லாதவர்களிடமிருந்து 16 அணு பெறுமான தபால் தலைகள் பெற்றுக்கொண்டும் அனுப்பப் பெறும். ஸ்ரீ விஸ்வேஸ்வரர் படமும் இதிலுண்டு.

த். ஆர்.

"மேடைத்தமிழ்" நூலுக்கு

சென்னை அரசாங்கத்தார் பரிந்தளித்த முதற் பரிசு.

K.G. குருசாமி ஆச்சாரி & சன்ஸ்
ஷ்ராப் கடை, கோபி
K.G.G. சில் நகைகள் கியாரண்டி உள்ளவை
மேலையான தங்கம் வெள்ளி நகைகளுக்கும்
பாத்திரங்களுக்கும் நம்பிக்கை உள்ள இடம்
85, கடைவீதி, கோபிசெட்டிபாளையம்

அம்மா வியந்தப் பெற்ற மேடைத் தமிழ் நூலுக்கு, 1952 ஆகஸ்டு மாதம் 23௳ யன்று சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகம் மூலம், சென்னையில் 22, 23, 24 தேதிகளில் நடைபெற்ற, மாபெரும் ஐந்தாவது தமிழ்க்கலை விழாவில் கடலெனத் திரண்டிருந்த தமிழ் அன்பர்கள், பிரமுகர்கள், மாசறக்கற்ற வித்வான்கள் முன்னிலையில் இலக்கியப் பகுதிக்கு முதற் பரிசாக ரூ. 500 சென்னை அரசாங்கத்தாரால் அளிக்கப் பெற்றதைக் கேட்டு நமது அன்பர்கள் களிமகிழ்வார்களென்று நம்புகிறோம். அன்று மாலை 4-மணிக்கு "இந்திய சிற்பக்கலை" எனும் பொருள் பற்றிப் பேசினோம். அச்சொற்பொழிவு மிக முக்கியமானதால், மறுமுறை விஸ்வகலாநிதியில் முழுவதும் வெளியிடுவோம். அதினின்றும் பொது மக்கள் மட்டுமல்ல, நம்மனோர்கள் தெரிந்து கொள்ளவேண்டிய பல விஷயங்களும் வெளிவரும். அன்பர்கள் படித்து இன்புறுவார்களாக!

தலைமை ஆசிரியர்.

மேடைத் தமிழ்

தமிழ்நாட்டுக்கோர் கலைப் பொக்கிஷமாக ஸ்ரீ. T. M தெய்வசிகாமணி ஆச்சாரியார் தந்துள்ள மேடைத் தமிழ் நூலை, சென்னை யூனிவர்சிட்டி என்னும் சர்வகலா சங்கத்தாரும், அண்ணாமலை யூனிவர்சிட்டியாரும், பி. ஏ. வகுப்புக்கும், வித்வான் வகுப்புக்கும் பாட புத்தகமாக ஏற்றுக்கொண்டு விட்டனர். ஆயிரக்கணக்காகச் செலவாகின்றன.

ஆகையால், விஸ்வகர்ம மக்களும் இதைப் படித்துப் பயன்பெற்று மேடைகளில் நல்ல பிரசங்கிகளாகப் பிரகாசிக்கவேண்டுமென்ற குலாபிமான நோக்கத்துடன் அதன் விலையை ரூ. 10-ல் இருந்து ரூ. 7½க்கு குறைத்துக் கொடுத்து வருகிறோம். தபால் சார்ஜு வேறு. வேண்டுவோர் உடனே ஆர்டர்செய்க. கொஞ்சம் பிரதிகளே எஞ்சி உள்ளன.

விஸ்வகர்மப் பிராம்மண வம்சப் பிரகாசிகை

1951 ஜனவரி மாதம் வெளியாகி,
வி. பி.-யில் அனுப்பப்பெறுகின்றது!

இந்த ஆகம சாஸ்திரத்திற்கு நீங்கள் ஆர்டர் செய்தீர்களா?

"இந்த நூலைப் படிக்காத விஸ்வகர்மர்கள் நாமெல்லாம் பிறவா நரனேயாம்" என ஒரு யாழ்ப்பாணக் குலாபிமானி எழுதுகிறார்; இது ஒரு குடும்பத்தில் இல்லையானால், அது ஸ்ரீ விஸ்வேஸ்வரர் அநுக்ரகம் பெறாத வீடாகும்" என்று எழுதுகிறார் ஒரு வேலூர் குலாபிமானி. பெங்களூர் குலாபிமானிகள் போற்றி அறிக்கை விட்டு விநியோகித்திருக்கிறார்கள்.

பிரம்மஸ்ரீ குலோத்தாரக, டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியாரின் தமது மகத்தான குலக் கடமையை ஸ்ரீ விஸ்வேஸ்வரர் திருவருளால், கலி பிறந்த 5052 ஆண்டுகளுக்குப் பின் பூர்த்தி செய்துவிட்டார். இப்புத்தகம் எவரும் பூஜைக்குரியதாகி விட்டது, இன்று; விஸ்வகர்ம குல டைபிள், குரான் ஆகிவிட்டது.

விலை ரூபாய் மூன்று
(தபால் சார்ஜ் பிரத்தியேகம்)
உள்நாட்டுக்கு 0-8-0—வெளிநாடுகளுக்கு 0-12-0
கொஞ்சம் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் வாங்க முந்துங்கள்!

T. D. J. சன் கம்பெனி
29-A, திருவேங்கட முதலி தெரு,
பார்க்டவுன் P.O. சென்னை.

Printed by G. Padmanabhan, at the Commercial Syndicate Press, 11, Venkatachala Mudali Street, Purasawalkam, Madras 7. Edited & Published by T. M. Daivasikhamani Achariar, F.R.S.A. (London), 29-A Thiruvengada Mudali Street, Periamet, Madras.